பக்கங்கள்: 12

விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 03 | வள்ளுவர் ஆண்டு 2049 | மார்கழி 06 | வெள்ளிக்கிழமை 21.12.2018 | கதிர் 46

## இனி இது ரகசியம் அல்ல!

'செல்லும் செல்லாததற்கு எல்லாம் செட்டியார் பொறுப்பு' – என்று ஒரு பேச்சு மொழி உண்டு.

தென்னிலங்கை அரசியலில் இப்போது அரசமைப்பு நெருக்கடி சிக்கல் விவகாரத்துக்கு சட்ட ஆலோசனை பெறவேண்டுமானால் அதற்கான செட்டியார் ஜனாதிபதி சட்டத்தரணி

பக்கம் 02 »

# ஜனாதிபதி முன்னிலையில் நேற்று 29 புதிய அமைச்சர்கள் பதவியேற்பு

## சட்டம், ஒழுங்கு மைத்திரிபால வசம்

கொழும்பு, டிசெ. 21

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முற்பகல் நடைபெற்ற புதிய அமைச்சரவை பதவியேற்பு நிகழ்வில் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களாக 29 பேர் பதவியேற்றுள்ளனர்.

பக்கம் 11 »



# டிசெம்பர் இறுதிக்குள் 2500 ஏக்கர் காணிகள் இராணுவம் விடுக்கும்

## உறுதிப்படுத்தினார் ஜனாதிபதி மைத்திரி



கொழும்பு, டிசெம்பர். 21

**இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்ட காணிகளில் 2 ஆயிரத்து 500 ஏக்கர் காணிகள் ஏற்கனவே உறுதியளித்தமை போன்று இந்த மாத இறுதிக்குள் விடுவிக்கப்படும்**

**– இவ்வாறு மீள உறுதியளித்துள்ளார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.**

பக்கம் 11 »

## எரிபொருள் விலைச் சூத்திரம் இன்று முதல் மீள நடைமுறை



கொழும்பு, டிசெ. 21

எரிபொருள் விலைச் சூத்திரம் மீண்டும் அமுல்படுத்தப்படும் என்று நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

அமைச்சர் பதவியைஏற்ற

பக்கம் 11 »

## மஹிந்த அணி எம்.பி. ரஞ்சித் சொய்சா கைது

### ஜனவரி 1 வரை விளக்கமறியல்



கொழும்பு, டிசெ. 21

மஹிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரி.ரஞ்சித் டி சொய்சா கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த 16ஆம் திகதி கொடக்கவெல நகரில் வைத்து

பக்கம் 11 »

## மீள்குடியேற்ற அமைச்சு இன ரீதியாகப் பிரிப்பு!

கொழும்பு, டிசெ. 21

மீள்குடியேற்ற அமைச்சுப் பதவிக்குப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் ரிஷாத் பதியுதீன் இருவரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பக்கம் 11 »

### அமைச்சுப் பதவி விடயத்தில்

## ஜனாதிபதிக்கு எதிராகப் பிரதமர் புதிய வியூகம்

கொழும்பு, டிசெ. 21

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் வழங்கப்பட்ட அமைச்சரவைப் பட்டியலில் சிலரை நிராகரித்த ஜனாதிபதியின் செயலுக்கு எதிராக அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க ஐக்கிய தேசியக் கட்சி

பக்கம் 11 »

## 10 வருட அபிவிருத்தியை 10 மாதத்தில் செய்வோம்!

### அமைச்சர் சஜித் சூளுரை



கொழும்பு, டிசெ.

பத்து வருடங்களுக்குள் செய்யத் திட்டமிட்டிருந்த அபிவிருத்தி வேலைத்திட்டங்களை எதிர்வரும் பத்து மாதங்களுக்குள் செய்யப்படவுள்ளன என வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் சஜித் பிரேமதாஸ

பக்கம் 11 »

## 6 பேரை நீக்கிய மைத்திரி!

கொழும்பு, டிசெ. 21

ஐக்கிய தேசியக் கட்சி பரிந்துரைத்து ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்ட அமைச்சர்களின் பெயர்ப் பட்டியலில் ஆறு பேரின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பக்கம் 11 »

## புதிய பட்ஜெட் ஜனவரியில்!

கொழும்பு, டிசெ. 21

புதிய அரசின் புதிய வரவு – செலவுத் திட்டம் எதிர்வரும் ஜனவரி மாதம் முன்வைக்கப்படவுள்ளதாக நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

எதிர்வரும் 4 மாத காலத்துக்குத் தேவையான நிதியை இடைக்கால நிதி அறிக்கை மூலம் பெற்றுக் கொள்ளவுள்ள

பக்கம் 11 »

## 20 நிமிடம் மட்டும் நடந்த அமைச்சரவைக் கூட்டம்!

கொழும்பு, டிசெ. 21

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசின் அமைச்சரவைக்

பக்கம் 11 »

## வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு மீள்குடியேற்றம் ரணில் வசமானது

கொழும்பு, டிசெ. 21

புதிய அரசில் தேசிய கொள்கைகள், பொருளாதார அபிவிருத்தி, மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, வடக்கு மாகாண அபிவிருத்தி, தொழிற்பயிற்சி திறன் மற்றும் இளைஞர் விவகாரம் ஆகிய அமைச்சுப்

பக்கம் 11 »

## இடைக்காலக் கணக்கறிக்கையை சமர்ப்பிக்க அமைச்சரவை அனுமதி

கொழும்பு, டிசெ. 21

அடுத்த ஆண்டு முதல் காலாண்டுக்கான நிதியை அங்கீகரித்துக்கொள்ள இடைக்காலக் கணக்கறிக்கையை இன்று வெள்ளிக்கிழமை நாடாளுமன்றில் சமர்ப்பிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நேற்று ஜனாதிபதி மைத்திரி

பக்கம் 11 »

# நெடுந்தீவுக் கடலில் கைதாகிய 8 இந்திய மீனவர்கள் விடுதலை

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன் பிடியில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டில் தடுத்து வைக்கப்பட்டிருந்த எட்டு இந்திய மீனவர்களை ஊர் காவற்துறை நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது.

நேற்று ஊர்காவற்துறை நீதிவான் நீதிமன்றில் நீதிவான் அ.ஜுட்சன் முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, மீனவர்கள் சார்பில் முன்னி லையான சட்டத்தரணி கடற்சீற்றம் காரணமாகவே அவர்கள் எல்லை தாண்டினார்கள் எனக் கூறினார்.

இதனையடுத்து நீதிவான் எட்டு மீனவர்களையும் கடுமையாக எச்சரித்ததுடன், மீண்டும் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றத் துக்காக கைது செய்யப்பட்டால், ஓர் ஆண்டு சிறைத்தண்டனை அனு பவிக்க வேண்டும் என எச்சரித்து நிபந்தனை களுடன் விடுதலை செய்தார்.

இதேவேளை, மீனவர்களிடம் கைப்பற்றப்பட்ட படகுகள் தொடர்பிலான வழக்கு விசாரணைகள் எதிர்வரும் ஜனவரி மாதம் 20ஆம் திகதி நடைபெறும் எனவும், அன்றைய தினம் படகின் உரிமையாளர் மன்றில் சமுகமளிக்க வேண்டும் எனவும் உத்தர விட்டு, வழக்கை ஒத்திவைத்தார்.

கடந்த 16 ஆம் திகதி தமிழகம், இராமேஸ்வரம், பாம்பன் மற்றும் ஜெகதாபட்டணம் ஆகிய பகுதி களைச் சேர்ந்த 8 மீனவர்கள் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்டார்கள் என்னும் குற்றச்சாட்டில் நெடுந்தீவுக் கடற்பரப்பில் வைத்துக் கடற்படையின ரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்களை நீரியல் வளத்துறையினரிடம் கடற் படையினர் ஒப்படைத்த னர். அத னையடுத்து மீனவர்கள் 8 பேரும் நீரியல் வளத்துறையினரால் ஊர் காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இதனையடுத்து 8 மீனவர்களையும் நேற்று வரை விளக்கமறி யலில் வைக்குமாறு உத்தரவிடப் பட்டிருந்தது. (ஐ - 07)

## அர்ஜுன் அலோசியஸ் வைத்தியசாலையில்

மத்திய வங்கிப்பிணைமுறி மோசடி விவகாரத்தில் விளக்கமறி யலில் வைக்கப்பட் டுள்ள பேர்ப்பசுவல் நிறுவனத்தின் உரிமையாளர் அர்ஜுன் அலோசியஸ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அவருக்குச் சுகவீனம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப் பட்டதையடுத்தே அவர் சிறைச்சாலை வைத்தி யசாலையில் அனுமதிக்கப்பட்டார் எனச் சிறைச் சாலைகள் திணைக்களம் தெரிவித்தது. (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எம்.ஏ.சுமந்திரன் என்றாகிவிட்டது.

அரசமைப்பையும் சட்டங் களையும் தம்பாட்டில் எதேச்சாதி காரத் துஷ்பிரயோகம் செய்யும் ஜனாதிபதியின் செயற்போக்குக்கு உயர்நீதிமன்றம் மூலம்தான் 'செக்' வைக்கலாம் என்ற மாதிரி நிலைமை வந்துள்ளது.

நிறைவேற்று அதிகாரத்தைக் கையில் வைத்திருக்கும் ஜனாதி பதி மைத்திரிபால சிறிசேன, அர சமைப்பும் சட்டங்களும் தன்னிச் சைப்படி வளைக்கக்கூடியவை என்று நினைத்துக் கொண்டு நடக்கின்றார்.

நேற்று அமைச்சர்களாக நிய மிப்பதற்கு பிரதமர் ரணிலால் விக்கிர மசிங்கவினால் பெயர் குறிப்பிட்டு சமர்ப்பிக்கப்பட்ட பட்டியலில் ஆறு பேரைத் தன்பாட்டில் வெட்டிவிட் டார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

பெயர் வெட்டப்பட்டவர்களில் ஒருவர் பீல்ட் மார்ஷல் சரத் பொன் சேகா. ஜனாதிபதியின் செயல் தான்தோன்றித்தனமானது எனச் சீறிய பொன்சேகா உயர்நீதிமன் றம் மூலம் ஜனாதிபதிக்குப் பாடம் புகட்ட விரும்பினார்.

பிறகென்ன? கொழும்பில் இப்போது சட்டத்துறைக்கு ஏக செட்டியார் சுமந்திரன்தானே...! அவருடன் அவசர அவசரமாகத் தொடர்பு கொண்டார். சுமந்தி ரனோ இந்த விவகாரத்தில் அடிப் படை விடயங்களைக் கூறிவிட்டு நாசூக்காக விலகிக் கொண்டார் என்று கேள்வி.

*"வழக்குப் போடலாம். உயர் நீதிமன்றம் மூலம் சட்ட நிவாரணம் பெறலாம். ஜனாதிபதியின் முடிவை மாற்றச் செய்யலாம். அதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன என்றே தோன்றுகின்றது. இவ்விடயத்தில் பாதிக்கப்பட்டவர் என்ற முறையில் நீங்கள் உட்பட ஆறு பேரில் ஒரு வரோ, ஆறு பேரோ அல்லது ஜனாதிபதிக்கு அந்த அமைச்சர் நியமனத்துக்கான பரிந்துரையை வழங்கிய பிரதமர் ரணில் விக்கிர மசிங்கவோ அடிப்படை உரிமை மீறல் வழக்குத் தொடர்ந்து சட்ட நிவாரணம் பெறலாம். ஜனாதி பதியின் முடிவை மாற்றி, சம்பந் தப்பட்டோருக்கு அமைச்சர் பதவிக்கான சத்தியப் பிரமா ணத்தைச் செய்து வைக்கும்படி ஓர் உத்தரவை உயர்நீதிமன்றத் திடம் பெறக்கூடிய வாய்ப்புகள் உள்ளன. எது, எப்படியென்றாலும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுட னும், உங்களின் ஐ.தே.க. சட்டத் தரணிகளுடனும் கலந்துரையாடி முடிவு செய்து கொள்ளுங்கள்!"*

– என்று கூறி மெல்ல விவகாரத் தில் இருந்து கழன்று கொண்டார் சுமந்திரன் என அறியவந்தது.

அதற்கும் தகுந்த காரணம் இருக்கக்கூடும்.

அமைச்சர்கள் பட்டியலை வெட்டிக் குறைத்தமைக்காக ஜனாதிபதி மீது மீண்டும் சட்ட வழக்கை ஆரம்பிக்கும் எண் ணத்தில் – நோக்கில் – பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இல்லை என்பது சுமந்திரனுக்கு நன்கு தெரியும் போல.

இந்தச் சூழ்நிலையில் – பொன்சேகாவுக்காக இன் னொரு சட்ட யுத்தத்தை தாம் ஆரம்பிப்பது தேவையற்றது, வீண் சிக்கலை வேண்டித் தரக்கூடி யது, அரசியலில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடி யது என்றெல்லாம் கணக்குப் போட்டிருப்பார் போலும் சுமந்திரன்.

சுமந்திரன் கழன்று கொண் டாலும், வேறு ஜனாதிபதி சட்ட தரணிகள் மூலம் இன்னொரு தடவையும் உயர்நீதிமன்றம் வாயி லாக ஜனாதிபதிக்கு சட்டப் பாடம் படிப்பிக்க வேண்டும் என்பதில் பொன்சேகா மும்முரமாகவும், உறுதியாகவும் இருக்கின்றார் என்று தெரிகின்றது.

ஆகவே, ஜனாதிபதிக்காக மீண்டும் சட்டமா அதிபர் உயர்நீதி மன்ற வாசலில் அலைய வேண்டி யிருக்கும் என்பதும் உறுதி போலும்.

★ ★ ★

எதிர்க்கட்சித் தலைவர் பதவி மஹிந்தவுக்கா? அல்லது சம்பந்த னுக்கா? – என்ற சர்ச்சைக்கு சபா நாயகர் கரு ஜெயசூரியா இன்று வெள்ளிக்கிழமை ஒரு முடிவை – தீர்ப்பை – அறிவிப்பார் என்று முன்னர் கூறப்பட்டாலும் அப்படி ஒரு முடிவு இன்று வராது என்கின் றன விடயமறிந்த வட்டாரங்கள்.

இது விடயத்தில் கூட்டமைப் பின் எழுத்து மூல ஆட்சேபத்தை – வாதத்தை – கூட்டமைப்புப் பேச் சாளர் எம்.ஏ.சுமந்திரன் இன்று தான் சபாநாயகர் கரு ஜெயசூரிய விடம் கையளிக்கவிருக்கின்றார். வாத விடயங்களைச் சபாநாயகர் பார்த்தவுடன் தமது முடிவை – தீர்ப்பை – அளிக்கக்கூடிய விவ காரம் அல்ல இது. முறையான சட்ட ஆலோசனைகள், நிபுணர் களின் கருத்துகள், இது போன்ற விடயங்களில் முன்னைய சபா நாயகர்களின் முடிவுகள் போன்ற வற்றை எல்லாம் கணக்கில் எடுத் துத்தான் சபாநாயகர் தமது தீர்ப்பை வழங்க வேண்டும். ஆகவே, அவர் தமது முடிவை இனி, அடுத்த மாதம் – ஜனவரி – 8 ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும் போதுதான் அறிவிப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த விவகாரத்தை ஒட்டி முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அவரது சகாக் களும் இன்னும் நாடாளுமன்ற உறுப்பினர்தானா என்பதும் விசா ரணை செய்யப்பட்டு முடிவு அறி விக்கப்பட வேண்டும் என்பதில் ஆளும் தரப்பும் தமிழ்க் கூட்ட மைப்பும் பிடிவாதமாக இருக்கின் றன.

ஒரு தேவைக்காக நாடாளு மன்றத் தெரிவுக்குழு அமைக்கப் பட வேண்டும் என்றால் அது தொடர்பில் ஒரு பிரேரணை முன் வைக்கப்பட்டு அது நாடாளுமன் றத்தில் நிறைவேற்றப்பட வேண் டும்.

அதன்பின்னரே அத்தகைய விடயத்தை சபாநாயகர் கையாளு வார். நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை நியமிக்க நடவடிக்கை எடுப்பார்.

அவ்வாறு ஏதேனும் ஒரு பிரேரணையை சபையில் முன் மொழிந்து அதனை நிறைவேற்ற வேண்டுமானால், அத்தகைய பிரேரணைக்கு ஐந்து நாள் முன் னறித்தல் உத்தியோகபூர்வமா கக் கொடுக்கப்பட வேண்டும்.

ஆனால், மேற்படி விடயத்தை ஆராய்வதற்குத் தெரிவுக் குழு அமைக்கப்பட வேண்டும் என்ற பிரேரணைக்கான முன்னறிவித் தலை – இன்றுதான் தமிழ்க் கூட்டமைப்பு கொடுக்கவிருக்கின் றது.

ஆகவே, இந்த விவகாரத்தை ஒட்டி தெரிவுக்குழு அமைப்பதற் கான பிரேரணை இன்று விவா தத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது. இன ஜனவரி 8 ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும் போதுதான் அந்தப் பிரேரணை பரிசீலிக்கப்பட வாய்ப்புண்டு. அது, பிரேரணையாக முன் மொழியப்பட்டு நிறைவேற்றப்பட் டால் தான் தெரிவுக்குழுவும் விசா ரணையும் தொடர வாய்ப்புண்டு.

அதுவரை இந்த எதிர்க்கட்சித் தலைவர் பதவி விவகாரம் கிணற் றில் போட்ட கல்லாகத் தேங்கிக் கிடக்கத்தான் போகின்றது போலும்...!

- மின்னல் -

# ஐ.ம.சு.கூட்டமைப்பிலிருந்து மஹிந்த தரப்பு விலகவில்லை

## நாடாளுமன்றச் செயலாளருக்குக் கடிதம்

கொழும்பு, டிசெ. 21

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் இருந்து மஹிந்த தரப்பு உறுப்பினர்கள் யாரும் விலகவில்லையென உறுதிப்படுத்தி நாடாளு மன்றச் செயலாளருக்குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மஹிந்த அமரவீரவினால் இந்தக் கடிதம் நேற்று அனுப்பிவைக்கப் பட்டுள்ளது.

அதில், கடந்த 2015ஆம் ஆண்டு தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந் திரக் கூட்டமைப்பின் மூலம் தெரிவான உறுப்பினர்கள் அனைவரும் அந்தக் கட்சியிலேயே உள்ளனர் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிப்பவர்கள் பொதுஜன பெரமுனவில் அங்கத்துவம் பெற்றதால், அவர்களுக்கு எதிர்க்கட்சி அந்தஸ்து வழங்கக்கூடாதென நாடாளுமன்றில் நேற்று முன்தினம் வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றன. எதிர்க்கட்சித் தலை வராக மஹிந்த நியமிக்கப்பட்ட பின்னர் இந்தச் சர்ச்சை ஏற்பட்டது.

இந்நிலையில், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் இருந்து மஹிந்த தரப்பினர் விலகவில்லையெனக் கூறி இந்தக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

# பல்கலை மாணவர்கள் எதிர்ப்புப் பேரணி பொலிஸார் கண்ணீர்ப்புகைத் தாக்குதல்

கொழும்பு, டிசெ. 21

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியம் முன்னெடுத்த எதிர்ப்புப் பேரணியைக் கலைப்பதற்காகப் பொலிஸார் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொண்டனர்.

கோட்டை ரயில் நிலைய முன்றிலில் வைத்துப் பேரணி மீது பொலிஸார் இந்தத் தாக்குதலை மேற்கொண்டனர்.

மருதானை தொழில்நுட்பக் கல்லூரி சந்திப் பகுதியிலிருந்து மாண வர்கள் நேற்றுப் பிற்பகல் எதிர்ப்புப் பேரணியை ஆரம்பித்தனர்.

பல்கலைக்கழகங்கள் பலவற்றில் நிலவும் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குமாறு வலியுறுத்தி பல்கலைக்கழக மாணவர்கள் இந்த எதிர்ப்பில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தேசிய ஜனநாயக முன்னணிக்கு கூட்டமைப்பு ஆதரவு வழங்காது

## கூறுகிறார் சுமந்திரன் எம்.பி.

கொழும்பு, டிசெ. 21

ஐக்கிய தேசிய முன்னணியால் உருவாக்கப்படவுள்ள, தேசிய ஜனநாயக முன்னணி என்ற புதிய கூட்டணிக்கு தமது கட்சி ஆதர வளிக்காது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறினார்.

தமது கட்சி தற்போதைய அரசுக்கு ஆதரவளிப்பது தற்போதைய அரசின் பொருளாதாரக் கொள்கைக்காக அல்ல என்று அவர் குறிப்பிட்டார்.(ஐ)

# வடமாகாணம் பற்றிய பார்வை மாறவேண்டும்

## அமைச்சர் வஜிர கோரிக்கை

வடக்கில் யுத்தம் செய்தவர்கள் மீதான பார்வையும் மக்களிடத்தில் மாற வேண்டும் என்று உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற் றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

அலரி மாளிகையில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

'30 வருடகால யுத்தம் தற்போது நிறைவுக்கு வந்துள்ளது. இந்தநிலையில், அனைவரையும் இணைத்துக்கொண்டு ஐக்கிய மாக பயணிக்கவேண்டிய பொறுப்பு எம் அனைவருக்கும் உள்ளது. எனினும், சில ஊடகங்கள் இந்தக் கடமையை நிறைவேற்ற முன் வருவதில்லை.

தற்போது நாட்டில் யுத்தம் இல்லை. அப்படியிருக்கும்போது இனியும் வடக்கு மக்களைப் புலிகள் எனும் கண்ணோட்டத்தில் பார்ப்பதை மக்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

தெற்கிலும் கிளர்ச்சிகள் ஏற்பட்டன. இதனால், ஆயிரக்கணக்கானவர்கள் தேவையில்லாமல் கொல்லப்பட்டனர். ஆனால், நாம் இந்தக் கிளர்ச்சிக்குக் காரணமானவர்கள், அதனை மேற்கொண்டவர்கள் என அனைவரையும் இன்று மன்னித்து விட்டோம். கொழும்பு, விஹாரமாதேவி பூங்காவில் வைத்தே கார்த்திகை வீரர்கள் நினைவுகூரப்படுகின்றனர்.

அப்படியிருக்கும்போது, வடக்கை மட்டும் ஏன் நாம் வேறு ஒரு கோணத்தில் பார்க்கவேண்டும்?

ஐக்கிய தேசியக் கட்சியானது இந்த நாட்டில் அனைத்து இன மக் களுக்கும் சொந்தமான ஒரு கட்சியாகும்.

நாம் இனிமேல், பேதங்களை பாராது ஐக்கியமாகப் பயணிக்க வேண்டும்–என்றார்.

(ஐ)

# 50 நாள்களாக நடந்தது அரசியல் சூழ்ச்சியல்ல

## கூறுகின்றார் திஸ்ஸ விதாரண



கொழும்பு, டிசெ. 21

நாட்டில் கடந்த 50 நாள்களாக இடம்பெற்றது ஒரு பெரிய சூழ்ச்சி என ஐக்கிய தேசியக் கட்சி கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாதென நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

நாட்டில் கடந்த 50 நாள்களாக இடம்பெற்றது ஒருபெரிய சூழ்ச்சியாகும் என்று ஐக்கிய தேசியக் கட்சித் தரப்பினர் கூறிக்கொண்டிருக்கிறார்கள். இந்தச் சூழ்ச்சியைத் தோற்கடித்ததன் ஊடாக, ஜனநாயகம் பாதுகாக்கப்பட்டு விட்டதாகவும் அந்தத் தரப்பினர் மகிழ்ச்சியடைந்து கொண்டிருக்கிறார்கள். இது ஒன்றும் அரசியல் சூழ்ச்சியல்ல. எனவே, இனியும் காரணங்களைக் கூறிக் கொண்டிருக்காமல் தேர்தலை உடனடியாக நடத்தவேண்டும்.

உண்மையான சூழ்ச்சி 2015 ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி தான் நாட்டில் இடம்பெற்றது. இதனால் கடந்த மூன்று வருடங்களாக நாடு பெரும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தது.

எமது நாட் டின் சொத்துக்கள் வெளிநாட்டுக் கம்பனிகளுக்கு விற்கும் நிலைமை ஏற்பட்டது. மக்களுக்கு வாழ்க்கைச் சுமை மற்றும் வரிச் சுமை என்பன அதிகரித்தது.

மேலும் மக்களின் சுதந்திரம், ஜனநாயகம் என்பன இந்தக் காலத்தில் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இவ்வாறான செயற்பாடுகளைப் பொறுத்துக்கொள்ள முடியாதுபோன காரணத்தினால் தான், ஜனாதிபதி ஒக்ரோபர் 26 ஆம் திகதி இந்த முடிவை எடுத்தார்- என்றார். (ஐ)

## 90 லட்சம் ரூபா பெறுமதியுடைய தங்க நகைகள் கடத்தியவர் கைது!

கொழும்பு, டிசெ. 21

இந்தியாவிலிருந்து சட்ட விரோதமாக இலங்கைக்குக் கொண்டு வரப்பட்ட தங்க நகைகளுடன் இலங்கையர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பிரதி சுங்க ஊட கப் பேச்சாளர் பிபில மினுவான்பிட்டிய தெரிவித்தார்.

சந்தேகநபர் நேற்று வியாழக்கிழமை காலை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரின் பயணப் பொதியிலிருந்து ஒரு கிலோ 198 கிராம் எடையுடைய தங்கம் மீட்கப்பட்டுள்ளது. அதன் பெறுமதி 90 இலட்சம் ரூபா எனச் சுங்கப் பிரிவினர் தெரிவித்தனர்.



கைது செய்யப்பட்ட சந்தேகநபர் கடுகண்ணாவையைச் சேர்ந்த 51 வயது டையவர்த்தகர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளைச் சுங்க அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர் என பிரதி சுங்க ஊடகப் பேச்சாளர் பிபில மினுவான்பிட்டிய மேலும் கூறினார். (ஐ)

## அமைச்சரானார் திகாம்பரம்!

### பட்டாசு கொளுத்தி பாற்சோறு சமைத்து கட்சித் தொண்டர்கள் கொண்டாட்டம்



கொழும்பு, டிசெ. 21

தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவர் பழனி திகாம்பரம், நேற்று முற்பகல் அமைச்சராக நியமிக்கப்பட்டமையையடுத்து, கட்சி தொண்டர்கள், ஹற்றன், நோர்வூட் பகுதியில் வெற்றிக் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

தேசிய அரசின்போதும், மலையக புதிய கிராமங்கள், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சுப் பதவியையே திகா வகித்தார்.

சூழ்ச்சி அரசில் குறித்த அமைச்சுப்பதவி, தொண்டாவுக்கு வழங்கப்பட்டிருந்தது. இந்நிலையில் மீண்டும் அப்பதவி திகாம்பரம் வசம் வந்திருப்பதாலேயே, கட்சி ஆதரவாளர்கள் வெற்றிக்கொண்டாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். (ஐ)

# சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தில் 50 கோடி ரூபாவுக்கு மேல் நிதி மோசடி!

## அங்கு பணிபுரியும் உத்தியோகத்தர் குற்றச்சாட்டு

கிளிநொச்சி, டிசெ. 21

கிளிநொச்சி-முல்லைத்தீவு சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தில் 50 கோடிக்கு மேல் ஊழல் மோசடி இடம்பெற்றுள்ளதாகச் சிவில் பாதுகாப்புத்திணைக்கள உத்தியோகத்தர் அகிலன் குற்றம் சுமத்தியுள்ளார்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தில் பாரிய மோசடி இடம்பெற்று வருவதாகக் கூறி கிளிநொச்சியில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் நேற்று ஊடக சந்திப்பொன்று இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சிவில்பாதுகாப்புத்திணைக்களத்தின் பண்ணைகளில் பணிபுரியும் உத்தியோகத்தர்களிடமிருந்து வருமானப் பணம் எனக் கூறி 3000 ரூபா பணம் தொடர்ச்சியாகப் பெறப்பட்டுவருகிறது. அதற்கு முறையாகப் பற்றுச் சீட்டுகள் வழங்கப்படாமல் அவற்றில் பல மோசடிகள் இடம்பெற்றுள்ளன.

இவ்விடயம் தொடர்பில் பல்வேறு தரப்பிடமும் முறையிட்ட போதிலும், எவ்வித பலனும் கிடைக்கவில்லை என்பதாலேயே ஊடகங்களின் மூலம் இதனை வெளிக் கொண்டுவர முன்வந்தோம்.

இங்கு பணிபுரிபவர்கள் அங்கவீனமுற்றவர்களாகவும், முன்னாள் போராளிகளாகவும் உள்ள நிலையில் இவ்வாறான மோசடி இடம்பெறுகிறது.

மலையக மக்கள் 1000 ரூபா சம்பளம் பெற்றுத் தருமாறு கோரி போராட்டம் நடத்தி வரும்நிலையில், இவ்வாறான மோசடிகளின் மூலம் தனிநபர் ஒருவர் சுகபோகங்களுடன் வாழ்வது கவலையளிக்கிறது.

இந்த மோசடிகள் தொடர்பில் எம்மிடம் முழுமையான ஆதாரங்கள் உள்ளன. இது தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்-என்றார். (ஐ)

## சட்டப்படி அமைச்சரவை; ஜப்பான் அரசு வரவேற்பு

இலங்கையுடன் நீண்ட காலமாக நட்புறவைக் கொண்டுள்ள நாடென்ற வகையில் ஜப்பான், சட்டத்திற்கு அமைவான முறையில் புதிய அமைச்சரவை நியமிக்கப்பட்டமை உட்பட இலங்கையில் அரசியல் ஸ்திரநிலையை நோக்கிய அண்மைய முன்னேற்றங்களை வரவேற்பதாக இலங்கைக்கான ஜப்பானியத் தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு பங்களிப்புச் செய்த அனைத்துத் தரப்பினரையும் பாராட்டுவதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையிலும் இந்து-பசுபிக் பிராந்தியத்திலும் சமாதானம், ஸ்திரநிலைமை மற்றும் சுபீட்சத்தை அடைவதற்காக இலங்கை அரசின் ஒத்துழைப்புடன் ஜப்பான் 'விரிவான கூட்டுப்பங்காண்மையை மேலும் வலுப்படுத்தத் தம்மை அர்ப்பணித்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

## பண்டிகைகளை முன்னிட்டு விடுமுறை நாள்களிலும் கடைகள் திறப்பு!

யாழ்ப்பாணம், டிசெ.21

எதிர்வரும் நத்தார் புதுவருடம் மற்றும் பொங்கல் பண்டிகைகளை முன்னிட்டு பொதுமக்கள் மற்றும் வாடிக்கையாளர்களின் நன்மை கருதி யாழ்ப்பாண நகரில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்கள் டிசெம்பர் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் தை மாதம் 16 ஆம் திகதி புதன்கிழமை வரையான காலப்பகுதிக ளில் உள்ள விடுமுறை நாள்கள் மற்றும் ஞாயிறு தினங்களில் வர்த்தகம் செய்வதற்கு ஏற்ற வகையில் வர்த்தகநிலையங்களைதிறந்துவியாபாரத்தில் ஈடுபடுமாறு யாழ்ப்பாணம் வணிகர் கழகம் அறிவித்துள்ளது.

## திருவாசக இசையரங்கு

காரைநகர், டிசெ. 21

காரைநகர் ஈழத்து சிதம்பரத்தில் நாளை சனிக்கிழமை காலை 9 மணியளவில் தேரில் சுவாமி ஆரோகணிக்கும் வேளையில் வடக்கு வீதியில் அமைந்துள்ள சிவனடியார் மடாலயத்தில் கலைமாமணி க.லோகேஸ்வரனின் திருவாசக அரங்கு பக்க வாத்திய சகிதம் இடம்பெறும்.

## திருக்குடும்ப ச.சமூக நிலைய ஒளி விழா

யாழ்ப்பாணம், டிசெ. 21

யாழ்ப்பாணம், அடம்பன் திருக்குடும்ப சனசமூக நிலையம் நடத்தும் ஒளிவிழா, நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு, நிலைய முன்றிலில் கலாபூசணம் செ. யோசப்பாலா தலைமையில் நடைபெறும்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக உலகத் தமிழ் பேரவைத் தலைவர் அருட்பணி எஸ். ஜே. இமானுவல் கலந்து சிறப்பிப்பார்.

விழாவில் நத்தார் கீதங்கள், கௌரவிப்புகள், போட்டிகள், வாழ்த்துரைகள், கலை நிகழ்ச்சிகள், நத்தார் தாத்தா வருகை பரிசில் வழங்கல் போன்றவை இடம்பெறும்.

## கருத்தாடல்

யாழ்ப்பாணம், டிசெ. 21

சர்வதேச மார்க்சிய குழு (யாழ்ப்பாணம்)வின் ஏற்பாட்டில், நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு "முடிவுக்கு வந்த நல்லாட்சியும் எதிர்கால அரசியலும்" என்ற தலைப்பில் ஒரு கருத்தாடல் நிகழ்வு டி.எம்.ஐ.நிறுவனத்தில் (பலாலி வீதி) ஏ.சி.ஜோர்ஜ் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வில் ஆரம்ப உரையை சோ.சிவபாலன் நிகழ்த்துவார்.

## அமைச்சு செயலாளர்கள் இன்று நியமிக்கப்படுவர்

கொழும்பு, டிசெ. 21

அமைச்சின்செயலாளர்கள் இன்று புதிதாக நியமிக்கப்படுவரென, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அமைச்சரவையில் நேற்று அறிவித்துள்ளார்.

ஜனாதிபதி தலைமையில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவைசந்திப்பிலேயே ஜனாதிபதி இதனைக் கூறியுள்ளார்.

இந்த அமைச்சரவைச் சந்திப்பில் நேற்று அமைச்சர்களாக பதவிப் பிரமாணம் செய்து கொண்ட 29 அமைச்சர்களும் கலந்துகொண்டனர். (ஐ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## ஜனாதிபதி செய்ய வேண்டிய வேலை

புதிய ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கு எதிரான தமது பகையுணர்வை அப்பட்டமாகவும் வெளிப்படையாகவும் பிரதிபலித்திருக்கின்றார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

பிரதம அமைச்சரான ரணில் விக்கிரமசிங்க கொடுத்த அமைச்சர்கள் பட்டியலில் ஆறு பேரைத் தம்பாட்டில் நீக்கி, அவர்களுக்குப் பதவி பிரமாணம் செய்து வைக்க மறுத்து, வழமைபோல தனது எதேச்சாதிகாரப் போக்கைப் பிரதி பலித்திருக்கின்றார் அவர்.

வழமையாக அமைச்சர்கள் – அமைச்சரவை – பதவி ஏற்கும் நிகழ்வு ஒரு பொது வைபவமாக நடைபெறும். விருந் தினர்களும் ஏனைய அமைச்சரவை உறுப்பினர்களும் பார்த்திருக்க அமைச்சர்கள் ஒவ்வொருவராக வந்து பதவி யேற்பர். இம்முறை அதற்கும் மறுத்துவிட்டார் ஜனாதிபதி. ஒவ்வொரு அமைச்சரும் தனித்தனியாகச் சென்று மூடிய அறைக்குள் ஜனாதிபதி முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்ய வேண்டிய அவலம்.

அது மாத்திரமல்ல, இந்த அமைச்சரவைப் பதவியேற்பு பற்றிய நிகழ்வில் செய்தி சேகரிக்கவும் ஊடகவியலாளர் கள் அனுமதிக்கப்படவில்லை.

புதிய அமைச்சர்களாகப் பதவியேற்போரின் குடும்பத்தவர் கள், ஊடகவியலாளர் எவருக்கும் அனுமதி இல்லை.

ஜனாதிபதி செயலகத்தில் நடந்த இந்த நிகழ்வு பற்றிய செய்திகளை ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு சேகரித்துத் தொகுத்து ஊடகங்களுக்கு வழங்கும் என்று தெரிவிக்கப் பட்டது.

இன்னுமொரு உச்சக்கட்டப் பகையுணர்வு நிலைமையும் வெளிப்படுத்தப்பட்டது. வழமையாக – இலங்கை சுதந்திர மடைவதற்கு முன்பிருந்தே – நாட்டில் புதிய அமைச்சரவை பொறுப்பேற்கும் போது நாட்டின் தலைவரோடு பிரதமர் மற் றும் புதிய அமைச்சர்கள் அடங்கிய அமைச்சரவை குழுமம் படம் எடுத்துக் கொள்ளும். இது வரலாற்று வழமை.

அமைச்சரவை மட்டுமல்லாமல், அமைச்சரவையில் இடம்பெறாத இராஜாங்க அமைச்சர்கள், பிரதி அமைச்சர் கள் ஆகியோரும் தனித் தனிக் குழுவாக நாட்டின் தலைவ ரோடு படம் எடுப்பது வழமையான முக்கிய விடயம்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் 29 அமைச்சர்களைக் கொண்ட அமைச்சரவைக்கு நேற்றுப் பதவிப் பிரமாணம் செய்து வைத்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று அமைச்சரவைக் குழுமப் படத்தைக் கூட எடுக்க இடமளிக்க வில்லை.

இந்த விரோத மனப்பாங்கு – பகையுணர்வுப் போக்கு – தெளிவான ஒரு செய்தியை வெளிப்படுத்தி நிற்கின்றது.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பெற்றிருக்கும் தரப்புடன் சேர்ந்து நாட்டை நிர்வகித்து, கொண்டிழுக்கும் போக்கில் – எண்ணத்தில் – நோக்கில் – ஜனாதிபதி மைத்தி ரிபால இல்லை என்பதுதான் அது.

தான் நாடாளுமன்றத்தைக் கலைத்துப் பொதுத் தேர் தலை நடத்த எடுத்த முடிவை, அரசமைப்பை மீறிய செய லாக உயர்நீதிமன்றம் அடையாளம் கண்டு முறியடித்துவிட்ட தால், அதைச் செய்வித்து, அரசுரிமையைப் பெற்றுக் கொண்ட ஐக்கிய தேசிய முன்னணித் தரப்பு ஆட்சியைச் சுமுகமாகக் கொண்டிழுக்க அனுமதிப்பதில்லை என்ற முடிவில் அவர் உறுதியாக இருக்கின்றார் என்பதையே அவர் செயற்போக்கு – நடத்தை – எடுத்துக்காட்டி நிற்கின்றது.

ஐக்கிய தேசிய முன்னணி அரசை சுமுகமாக நிர்வாகம் நடத்தவிடாமல் தனது நிறைவேற்று அதிகாரம் மூலம் நெருக்கடியைக் கொடுத்து, வேறுவழியின்றி, அந்த அர சைத் தானாகவே பொதுத் தேர்தலை நாடிச் செல்ல வைப்பதே ஜனாதிபதியின் திட்டம் போலும்.

நாடாளுமன்றக் கலைப்பு நடவடிக்கை அரசமைப்பை மீறிய செயற்பாடு என உயர்நீதிமன்றம் ஏகமனதாக தீர்ப்பு வழங்கிய பின்னரும் பொதுத் தேர்தலை நடத்தத் தாம் எடுத்த காரணங்கள் – பின்னணிகள் – போன்றவற்றை வெளியிட்டு அதனை நியாயப்படுத்த முயன்றார் ஜனாதி பதி.

அவர் ஒரு விடயத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். ஜனாதிபதியாக மக்களிடம் அவர் பெற்ற ஆணை காலத்தால் முந்தியது. அதுவும் ரணிலின் ஐக்கிய தேசிய முன்னணி, ராஜித தரப்பு, தமிழ் – முஸ்லிம் தரப்புகள் எல்லாம் சேர்ந்து தான் அவருக்கு அந்த ஆணையைப் பெற்றுக் கொடுத்தன. ஆனால் அந்தத் தரப்புகள் இப்போது அவரோடு இல்லை.

ஆனால், ஐ.தே.மு. அரசு அமைக்கப் பெற்ற நாடாளு மன்ற ஆணை காலத்தால் பிந்தியது. அண்மைக் காலத் திற்கு உரியது. அந்தத் தரப்புகள் மக்களிடம் பெற்ற அந்த ஆணையில் மைத்திரியோ, அவரது சு.கவோ, ஐ.ம.சு. கூட்டமைப்போ சம்பந்தப்படவில்லை. அவற்றை விட்டுத்தான் ஐ.தே.முன்னணி இந்த அரசு அமைக்கும் ஆணையைப் பெற்றது. அந்தத் தரப்புகள் இப்போதும் ஐ.தே.முன்னணி யில்தான் உள்ளன.

அப்படியாயின் இன்று ஆட்சிக்கும் நிர்வாகத்துக்கும் மக்களின் ஆணை பெற வேண்டுமானால், அதைப் பெற வேண்டியவர் ஜனாதிபதிதான். நாடாளுமன்றம் அல்ல.

அதைச் செய்வதற்கு ஜனாதிபதி மைத்திரிபால தயாரா? அதற்கு அவருக்குத் துணிச்சல் உண்டா?

# 11 தமிழர்கள் கடத்தப்பட்டு காணாமற்போன வழக்கை இழுத்தடிக்கின்றார் சட்டமா அதிபர்

## நீதிமன்றத்தில் குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 21

கொழும்பில் 11 தமிழர்கள் கடத்திச் செல்லப்பட்டுக் காணா மல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கில் சந்தேக நபர்களுக்கு எதிரான குற்றப் பத்திரத்தைத் தாக்கல் செய்யா மல் சட்டமா அதிபர் இழுத்தடிக்கி றார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டுள் ளது.

சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு பிணை வழங்கப் பட்டுள்ள கொமடோர் டி.கே.பி தசநாயக்க மற்றும் கொமடோர் சுமித் ரணசிங்க ஆகியோர் தற்போது சேவையில் இணைக் கப்பட்டுள்ளனர் என குற்றப்புல னாய்வுத் திணைக்களத்தினர் நேற்றுமுன்தினம் நீதிமன் றத்துக்கு அறிவித்தனர்.

இதன் காரணமாக வழக்கின் பிரதான சாட்சியாளரான லெப் டினன்ட் கமாண்டர் சமிந்த வெலகெதர உள்ளிட்ட சாட்சி யாளர்களுக்கு உயிர் அச்சுறுத் தல் ஏற்பட்டுள்ளதாக முறைப் பாடு கிடைத்துள்ளதாகவும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிவானின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர்.

கொழும்பில் 11 இளைஞர் கள் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள கடற் படையின் முன்னாள் லெப்டி னண்ட்கமாண்டர் சந்தன பிரசாத் ஹெட்டியாராச்சி எதிர்வரும் 2 ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளார்.

2008ஆம் ஆண்டு ஒகஸ்ட் 8ஆம் திகதி தொடக்கம் செப் ரெம்பர் 17ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கொட்டாஞ் சேனை, வெள்ளவத்தை, மட் டக்களப்பு, திருகோணமலை ஆகிய பிரதேசங்களில் 11 தமி ழர்கள் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர் பில் அப்போதைய கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொட முறைப்பாடு செய்திருந்தார்.

அதன்படி முன்னெடுக்கப் பட்ட விசாரணையில் கடற்படை யைச் சேர்ந்த சம்பத் முனசிங்க, கொமாடோர் டி.கே.பி.தச நாயக்க, சுமித் ரணசிங்க, லக்ஸ் மன் உதயகுமார, நளின் பிர சன்ன விக்ரமசூரிய, தர்மதாஸ, ராஜபக்ஷ கித்சிரி, கஸ்தூரிகே காமினி, அருண துசார மென் டிஸ் ஆகியோர் சந்தேகநபர்க ளாக பெயரிடப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் சஜ்சீவ பிரசாத் சேனாரத்ன மற் றும் ஆரூட் என்று அழைக்கப் படும் அன்னாவி ஆகியோர் டிசெம்பர் 14ம் திகதி விளக்கமறி யலில் வைக்கப்பட்டனர்.

சந்தேகநபர்கள் மீது குற்றப் பத்திரத்தை நீதிமன்றில் முன் வைத்து சுருக்கமுறையற்ற விசாரணைகளை ஆரம்பிக்கக் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் தயார் என்றபோதும் சட்டமா அதிபரால் இழுத்தடிப்புச் செய் யப்படுவதாகக் குற்றஞ்சாட்டப் பட்டுள்ளது.

இந்த வழக்கை சிரேஷ்ட அரச சட்டவாதி ஜனக பண்டார முன்னெடுத்துச் செல்கிறார். அவர் சிறந்த முறையில் செயற் பட்டு வருகின்றபோதும் விசா ரணையை இழுத்தடிப்புச்செய்ய அவருக்கும் அழுத்தம் கொடுக் கப்படுகிறது என்று தெரிவிக்கப் படுகிறது.

இந்த வழக்கு கொழும்பு கோட்டை நீதிவான் ரங்க திசா நாயக்க முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது.

சந்தேகநபரான கடற்படை யின் முன்னாள் லெப்டினன்ட் கமாண்டர் சந்தன பிரசாத் ஹெட் டியாராச்சி (நேவி சம்பத்) மன் றில் முற்படுத்தப்பட்டார்.

தற்போது கடற்படையின் புலனாய்வுப் பிரிவு உத்தியோ கத்தர்கள் இருவர் நீதிமன்றத் துக்குள் அமர்ந்துள்ளனர். அவர் களால் எனது உயிருக்கு அச்சு றுத்தல் ஏற்பட்டுள்ளது என்று குற்றப்புலனாய்வுத் திணைக்க ளத்தின் பொறுப்பதிகாரி பிரதம பொலிஸ் இன்ஸ்பெக்டர் நிசாந்த டி சில்வா நீதிவானின் கவனத் துக்குக் கொண்டு வந்தார்.

இந்த விடயங்களை ஆராய்ந்த நீதிவான், சந்தேகந பரான நேவி சம்பத்தை எதிர்வரும் ஜனவரி 2ஆம் திகதிவரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

# சிங்கள மொழியில் தண்டப் பத்திரம்; பொலிஸாருக்கு எதிராக முறைப்பாடு

## மனித உரிமை ஆணைக்குழுவில் விசாரணை

யாழ்ப்பாணம், டிசெ. 21

சிங்களத்தில் தண்டப்பத் திரம் எழுதிக்கொடுத்தமைக் காக வடக்கு மாகாண முன் னாள் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா யாழ்.பிராந்திய மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்தில் கோப்பாய் பொலிஸாருக்கு எதிராக முறைப் பாடு செய்திருந்தார்.

இந்த முறைப்பாடு தொடர் பில் நேற்று மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத் தில் பிராந்திய பணிப்பாளர் த.கனகராஜ் தலைமையில் விசாரணை நடைபெற்றது.

அதன்போது , கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதி காரி மற்றும் முன்னாள் எதிர்க் கட்சித் தலைவர் ஆகியோர் பிரசன்னமாகி இருந்தனர்.

நேற்றுச்சில இணக்கப்பாடு கள் எட்டப்பட்ட நிலையில் விசாரணைகள் எதிர்வரும் ஜனவரி மாதத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

இந்த விசாரணைகளின் பின்னர் சி.தவராசா ஊடகங்க ளிடம் தெரிவித்ததாவது:

கடந்த சில தினங்களுக்கு முன்னர் நான் காரில் பய ணித்தபோது, திருநெல்வேலிப் பகுதியில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த போக்குவரத்துப் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மறித்துக் காரின் முன்பக்கக் கண்ணாடி யில் வரி அனுமதிப்பத்திரம் ஒட்டப்பட்டு காட்சிப்படுத்த வில்லை எனக் கூறித் தண்டம் எழுத முற்பட்டனர்.

அதற்கு நான், கண்ணாடி யில் ஒட்டி காட்சிப்படுத்தவேண் டும் என கட்டாயம் இல்லை. நீங்கள் வரி அனுமதிப் பத்தி ரத்தைக் கேட்டால் அதனை நான் காண்பிக்கமுடியும் என் றேன்.

பின்னர் நான் ஆசனப்பட்டி அணியவில்லை எனத் தண் டம் எழுத முற்பட்டபோது, நான் அதற்கு அனுமதித்தேன். அப்போது அவர்கள் சிங்க ளத்தில் ஆசனப்பட்டி அணி யாமை எனத் தண்டம் எழு தித் தந்தார்கள்.

அத்தோடுதமது பொறுப்பதி காரி நாளொன்றுக்கு குறைந் தது ஐந்து தண்டம் ஆவது எழுதவேண்டும் எனப் பணித் துள்ளார். அதனாலே தாம் தண்டம் எழுதவேண்டிய நிர்ப் பந்தத்தில் உள்ளோம் எனவும் அவர்கள் கூறினார்கள்.

எனக்குச் சிங்கள மொழி தெரியாதமையால் சிங்கள மொழியில் எழுதி இருந்த மையைவாசிக்கமுடியவில்லை. அதனால் என் மொழியுரிமை மீறப்பட்டமை தொடர்பில் மனித உரிமை ஆணைக்குழு வில் முறைப்பாடு செய்தேன்.

எனது முறைப்பாட்டின் பிரகாரம் நேற்று விசாரணை கள் நடைபெற்றன. அதில் வாகன அனுமதிப்பத்திரம் காட்சிப்படுத்தாமை தண்டப்பணம் செலுத்த வேண்டிய குற்றமில்லை எனப் பொலிஸ் நிலையப் பொறுப் பதிகாரி ஏற்றுக்கொண்டார்.

சிங்கள மொழியில் தண்டப் பத்திரம் எழுதக் காரணம், தமிழ் மொழி எழுதத் தெரிந்த பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் இல்லா மையே காரணம் எனப்பொலிஸார் தெரிவித்தனர்.

அதற்கு நான், பொலிஸார் பதவி உயர்வு பெற இரண்டாம் மொழி தெரிந்திருக்க வேண்டும் என இருக்கும்போது இரண்டாம் மொழி தெரியவில்லை எனக் கூறுவதை ஏற்றுக்கொள்ள முடி யாது எனக் கூறினேன்.

தமிழ்மொழியில் எழுதிகொடுப் பது தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்க உள்ளதாக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கூறி னார்.

அதனைத் தொடர்ந்து விசா ரணைகளை ஜனவரி மாதத்திற்கு மனித உரிமை ஆணைக்குழு இணைப்பாளர் ஒத்திவைத்தார் – என்றார். (ஐ)

## நாளை

22.12.2018
சனிக்கிழமை
நட்சத்திரம்: மிருகசீரிடம் பி.இ 12.35 வரை
திதி :பூரணை பி.இ 12.23 வரை
சுபநேரம் : 3.25 – 4.55 வரை
இராகுகாலம் : 9.25 – 10.55 வரை

# ஆவா குழுவினால் அச்சுறுத்தல் இல்லை

## ராணுவத் தளபதி அறிவிப்பு



கொழும்பு, டிசெ. 21

வடக்கில் செயற்படுவதாகக் கூறப்படும் ஆவா குழுவினால், தேசிய பாதுகாப்புக்கு எந்த அச்சுறுத்தலும் இல்லை என்று இராணுவத் தளபதி லெப். ஜெனரல் மகேஸ் சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இராணுவத்தின் செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்–

தேசிய பாதுகாப்புக்கு எந்த வகையான ஆபத்து ஏற்பட்டாலும் அதனைச் சமாளிப்பதற்கான வசதிகளுடன் சிறிலங்கா இராணுவம் உள்ளது.

இராணுவ இயந்திரம் பலமாக உள்ளது. புலனாய்வு வலையமைப்பு முழுமையாகச் செயற்படுகிறது.

எனவே, ஆவா குழுவிடம் இருந்தோ, அல்லது வேறெந்த குழுவிடம் இருந்தோ அச்சுறுத்தல் ஏற்படும் சாத்தியங்கள் இல்லை.

பொதுமக்களுக்கு தவறான கருத்தை ஏற்படுத்தும் வகையில், வடக்கிலுள்ள மக்களின் காணிகள் திரும்ப ஒப்படைக்கப்படுவது தொடர்பாகச் சமூக ஊடகங்களில், பொய்யான செய்திகள் வெளியிடப்படுகின்றன.

வடக்கில் இராணுவம் சில காணிகளைக் கைப்பற்றி வைத்திருந்தாலும், அவை முன்னர் பொதுமக்களுக்குச் சொந்தமானவையாக இருந்தன.

எனவே, அந்தக் காணிகளை அவர்களுக்கு விடுவிக்க இராணுவம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கும்– என்றார். (ஐ)

# ஹெரோயின் வைத்திருந்த ஐவர் வவுனியாவில் கைது



வவுனியா, டிசெ. 21

வவுனியாதேக்கவத்தைப் பகுதியில் உள்ள பாழடைந்த வீடொன்றில் வைத்து கெரோயினுடன் ஐந்து இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபரின் கீழ் செயற்படும் சிறப்புப் போதை ஒழிப்புப் பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் அனுர அபயவிக்கிரமவின் கீழ் செயற்படும் சிறப்புப் போதை ஒழிப்புப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய வவுனியா தேக்கவத்தைப் பகுதியிலுள்ள பாழடைந்த வீடு ஒன்றில் திடீர் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.


இதன்போது ஹெரோயினைப் பயன்படுத்துவதற்குத் தயார் நிலையில் இருந்த 5 இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடமிருந்து சில ஹெரோயின் பைக்கெற்றுகளையும் பொலிஸார் மீட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர் எனப் பொலிஸார் மேலும் கூறினர். (ஐ-100)

## புதிய சர்ச்சை வெடித்துள்ளதால்

# தேடுவாரின்றிக் காணப்பட்டது எதிர்க்கட்சித் தலைவர் ஆசனம்




கொழும்பு, டிசெ. 21

மஹிந்த ராஜபக்ஷவை சபாநாயகர் கரு ஜயசூரிய எதிர்க்கட்சித் தலைவராக அறிவித்ததை அடுத்து, நாடாளுமன்றத்தில் புதிய சர்ச்சை வெடித்துள்ளது.

அவரது நியமனத்துக்கு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்பன கடும் எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றன.

இந்தநிலையில், நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய இரா.சம்பந்தன், தற்போது இரண்டு எதிர்க்கட்சித் தலைவர்கள் இருக்கும் நிலை ஏற்பட்டிருப்பதாகக் கூறியிருந்தார்.

எனினும், இரண்டு எதிர்க்கட்சித்தலைவர்களுமே, எதிர்க்கட்சித் தலைவருக்குரிய ஆசனத்தில் அமர்ந்திருக்கவில்லை.

சர்ச்சை வெடித்ததை அடுத்து, மஹிந்த நேற்று முன்தினம் நாடாளுமன்ற அமர்வில் பங்கேற்கவில்லை. அதேவேளை, இரா.சம்பந்தனும், நேற்று முன்தினம் அமர்வின்போது, எதிர்க்கட்சித் தலைவர் ஆசனத்தில் அமரவில்லை.

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் ஆசனத்துக்காகக் கடும் வாக்குவாதங்கள் நடந்து கொண்டிருந்தபோதும், எதிர்க்கட்சித் தலைவர் ஆசனம் வெறுமையாக – தேடுவாரின்றிக் காணப்பட்டது. (ஐ)

# மைத்திரியை மதிக்காத வெல்கம

கொழும்பு, டிசெ. 21

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஏற்பாடு செய்யும் எந்தவொரு கூட்டத்திலும் இனிக் கலந்துகொள்ளப் போவதில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அதன்படி ஜனாதிபதி தலைமையில் கடந்த செவ்வாய் காலையில் இடம்பெற்ற கூட்டத்திலும் கலந்து கொள்ளவில்லை. இதற்கு பிறகு ஜனாதிபதியுடன் நடைபெறும் எந்தக் கூட்டத்திலும் கலந்து கொள்ளாது புறக்கணிக்கப் போகிறேன். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுவிலிருந்து நீக்கப்பட்ட பின்னர் ஜனாதிபதியுடன் எந்த சந்திப்பிலும் கலந்து கொள்ளவில்லை – என்றார். (ஐ)



# முள்ளியவளை மத்தியில் யானைகள் அட்டகாசம்!

## விவசாயிகள் கவலை



முல்லைத்தீவு, டிசெ. 21

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட, முள்ளியவளை மத்தி கமக்கார அமைப்பின் பகுதிகளுக்குள் நாளுக்கு நாள் காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளதாக அப்பகுதி விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

இதனால் தமது நெற்பயிர்ச் செய்கை மற்றும் உப உணவுப் பயிர்ச்செயகை என்பன பெரிதும் சேதத்திற்குள்ளாகியுள்ளதாக அவர்கள் கூறினர்.

இது தொடர்பாக முள்ளியவளை மத்தியின் கமக்கார அமைப்பின் தலைவர் கட்டையர் – மகாலிங்கம் தெரிவிக்கையில்–

சிறிய நீர்ப்பாசனக் குளமான தொத்தி மோட்டைக்குளத்தின் கீழ் 07 பங்காளிகளுக்குரிய 28 ஏக்கர் வயல் நிலங்களும், ஆராத்தியா முறிப்புக் குளத்தின் கீழ் 66 பங்காளிகளுக்கு 198 ஏக்கர் வயல்நிலங்களும், துவரம்பிலவில் 9 பங்காளிகளுக்குரிய 36 ஏக்கர் மானாவாரி வயல் நிலங்கள், ஏனைய 28 ஏக்கர் மானாவரி வயல் நிலங்களும் உள்ளன.

இந்த வயல் நிலங்களில் தற்போது காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டிருக்கும் நிலையில் யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளது. தற்போதுள்ள நிலைமையில் இரவு, பகலாக வயலுக்குள்ளேயே நின்று விவசாயிகள் காவல் புரிய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந் நிலையைக் கமநல சேவைத் திணைக்களத்தினருக்குத் தெரியப்படுத்தியதன் விளைவாக, எமது கமக்கார அமைப்புக்கு இருபது யானை வெடிகள் வழங்கப்பட்டன.

வெடிகள் போதாமையைக் கருத்தில் கொண்டு, நடுப்பகுதி விவசாயிகளுக்கு யானைத் தொல்லை இல்லை என்பதால், காட்டுப் பகுதிக்கு அருகில் உள்ள வயற்காரர்கள் பத்துப் பேருக்கு இரண்டு வெடிகள் வீதம் வழங்கப்பட்டன. அந்த வெடிகளும் ஒரே நாளிலேயே தீர்ந்து விட்டன. இதனால் தற்போது பெரும் இன்னல்களுக்கு விவசாயிகள் முகங்கொடுத்து வருகின்றனர்.

2016, 2017 ஆம் ஆண்டு காலபோக நெற்செய்கையின்போதும், இப்படியான யானைத் தொல்லை இருந்தது. எனவே 2.5 கிலோமீற்றர் தூரத்துக்கு யானை வேலி அமைத்துத் தருமாறு கமநல அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு எமது கமக்கார அமைப்பால் கடிதம் வழங்கப்பட்டது. இருந்தும் இன்றுவரை அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

இது தவிர முள்ளியவளை மத்திப் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட கிராமத்துக்குள்ளும் யானைகள் புகுந்து அட்டகாசம் செய்கின்றன. இந்தப் பகுதியில் 36 பேருக்குப் புதிதாக காணிகள் வழங்கப்பட்டு வீடுகள் கட்டி அவர்கள் வசிக்கின்றனர். அவர்களின் உப உணவுப் பயிர்ச்செய்கைகளான நிலக்கடலை, தென்னை, வாழை என்பனவும் யானைகளால் அழிக்கப்படுகின்றன–என்றார்.

இது தொடர்பாக முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆர். சுகந்தனைத் தொடர்புகொண்டு கேட்டபோது–

கடந்த விவசாயக் குழுக்கூட்டத்தில் யானைப் பிரச்சினைகள் தொடர்பாகப் பேசப்பட்டது. எந்தெந்த இடங்களுக்கு யானை வேலி தேவையோ அவ்விடங்களை அடையாளப்படுத்தி அதற்குரிய கடிதங்களை அமைப்புகள் ஊடாகப் பெற்று மாவட்ட செயலகம் ஊடாக உரிய அமைச்சுக்கு அனுப்பி வைப்பதெனவும் அந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. இந்தக் கூட்டத்தில் மதவளசிங்கன், கொக்குத்தொடுவாய் பகுதிகளில் காணப்படும் யானைப் பிரச்சினைகள் தொடர்பிலும் பேசப்பட்டது.

பல காலமாக முயற்சித்து விசுவமடு தொட்டியடி இடைக்காட்டுக் குளத்திலிருந்து, கல்மடுக் குளம் வரை யானை வேலி போடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. அடுத்து முத்தையன் கட்டுக்கும் யானை வேலி அவசியம் தேவைப்படுகின்றது.

அத்துடன் எமது கமநல சேவைத் திணைக்களத்துக்கே ஐம்பது யானை வெடிகள்தான் வழங்கப்பட்டுள்ளன. வெடிகள் வேண்டுமென மீண்டும் பணிப்பாளர் அவர்கள் உரியவர்களுக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.–என்றார். (ஐ)

# சபரிமலை ஆலயத்துக்குள் காலணியுடன் பொலிஸார் சென்றமையால் பரிகார பூஜை

## திருநங்கைகளுடன் பாதுகாப்புக்குச் சென்றவர்களாம்

திருவனந்தபுரம்,டிசெ.21

பாதுகாப்புக்காக திருநங்கைகளுடன் சபரிமலைக்குச் சென்ற பொலிஸார், தமது சப்பாத்தைக் கழற்றாமல் சந்நிதானத்தில் நின்றதால் சந்நிதானத்தில் நேற்று பரிகார சுத்தி கிரியை பூஜைகள் நடந்தன.

சபரிமலையில் செவ்வாயன்று 4 திருநங்கைகள் சாமி தரிசனம் செய்தனர். இதற்காக பம்பையில் இருந்து இருமுடி கட்டுடன் சென்ற அவர்களுக்கு பலத்த பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டது.

பாதுகாப்புக்காக திருநங்கைகளுடன் சபரிமலைக்கு சென்ற பொலிஸார் தமது சம்பாத்தைக் கழற்றாமல் சந்நிதானத்தில் நின்றனர். இந்தச் சம்பவத்துக்கு பக்தர்கள் பலர் எதிர்ப்பு தெரிவித்தனர். முதலில் பொலிஸார் இதைக் கண்டு கொள்ளவில்லை. தொடர்ந்துபொலிஸாரின் செயலுக்கு எதிர்ப்பு வலுத்ததைத் தொடர்ந்து, அவர்கள் சப்பாத்தைக் கழற்றிவிட்டு பணியில் ஈடுபட்டனர். இந்தச் சம்பவம் சபரிமலையில் பரபரப்பை ஏற்படுத்தியது.

பொலிஸாரின் இந்த நடவடிக்கை



சந்நிதானத்தை அசுத்தம் செய்து உள்ளதாகக் கருதி சபரிமலையில் பரிகார சுத்திகிரியை பூஜைகள் நடத்த தந்திரி கண்டரரு ராஜீவரு உத்தரவிட்டார். அதைத்தொடர்ந்து, சந்நிதானத்தில் புதனன்று பரிகார சுத்தி கிரியை பூஜைகள் நடந்தன.

# சபரிமலை கோவிலுக்குள் சென்று திருநங்கைகள் நால்வர் தரிசனம்

## இருபது பொலிஸார் புடைசூழ நின்று பதுகாப்பு

திருவனந்தபுரம்,டிசெ.21

சபரிமலை கோயிலில் பெண்களை அனுமதிப்பது தொடர்பாக தொடர்ந்து கசப்பான சம்பவங்கள் நடந்துவரும் நிலையில் நான்கு திருநங்கைகள் தரிசனம் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்திய உச்ச நீதிமன்றம் பெண் பக்தர்களை சபரிமலைக்குள் அனுமதிக்கவேண்டும் என உத்தரவிட்டிருந்த நிலையில், சில கும்பல்களால் திரும்பத் திரும்ப பெண் பக்தர்கள் தடுக்கப்பட்டனர்.

நேற்று முன்தினம் (புதன்கிழமை) காவல்துறை பாதுகாப்புடன் கோயிலுக்குள் அனுமதிக்கப்பட்ட திரு நங்கைகள் அனைவரும் கருப்பு நிற சேலை அணிந்திருந்தனர்



**இடமிருந்து வலம்** – *அவந்திகா, ரெஞ்சிமோல், திருப்தி மற்றும் அனன்யா.*

முன்னதாக கடந்த ஞாயற்றுகிழமையன்று பாதுகாப்பு காரணங்களுக்காக இந்த நான்கு திருநங்கைகளும் கோயிலைச் சென்றடைவதற்கு முன்னர் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

உச்சநீதிமன்றம் கடந்த செப்டம்பர் மாதம் பெண்களை அனுமதிக்க வேண்டும் என உத்தரவிட்டது. ஆனால் அதற்கு முன்னதாகவே திருநங்கைகள் கோயிலுக்குள் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

ஆனால் உச்சநீதிமன்ற தீர்ப்புக்கு எதிராகப் பெரும் போராட்டங்கள் வெடித்த நிலையில் சில பொலிஸார் திருநங்கைகளை ஆண்கள் போல வேடமிட்டு கோயிலுக்குள் வருமாறு அறிவுறுத்தியிருந்தனர்.

ஆனால் திருநங்கைகள் பொலிஸாரின் யோசனைகளை ஏற்கவில்லை. கேரள உயர்நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட கமிட்டி முன்பு இவ்விவகாரத்தை எடுத்துச் சென்றனர்.

திருநங்கைகள் கோயிலுக்குள் செல்லலாம் என கமிட்டி ஒப்புக்கொண்டது. மேலும் கோயில் நிர்வாகிகளும் திருநங்கைகள் மாதவிடாய்க்கு உள்ளாகமாட்டார்கள் என்பதால் அவர்களை அனுமதிக்க ஆட்சேபனையில்லை என்றன.

பத்து முதல் ஐம்பது வயது வரையிலிருக்கும் பெண்களை சபரிமலையில் அனுமதிக்க தடை இருந்தது. ஐயப்பன் கடவுள் ஒரு பிரம்மச்சாரி என்பதால் அனுமதிப்பதில்லை, இக்கோயில் புனிதமானது என கோயில் நிர்வாகம் சொல்லியிருந்தது.

ஆனால் உச்சநீதிமன்றம் இந்த தடையை உடைத்ததால் செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட பல பெண்கள் கோயிலுக்குச் செல்ல முயன்றனர். இந்து தேசியவாத கட்சியான பா.ஜ.க. மற்றும் சில கூட்டணி கட்சிகள் இதற்குக் கடும் எதிர்ப்பு தெரிவித்தாலும் போராட்டம் செய்ததாலும் பாதுகாப்பு காரணங்களால் இப்பெண்கள் கோயிலுக்குள் செல்ல முடியவில்லை.

பெண்களின் அடிப்படை உரிமையை உறுதி செய்யும் வகையில் உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்திருந்த போதிலும் இந்தக் கட்சிகள் பாரம்பரியம் தொடரவேண்டும் என்றே விரும்புகின்றன.

கோயிலுக்குச் சென்ற நான்கு திருநங்கைகளில் ஒருவரான 33 வயதான திருப்தி கூறியவை வருமாறு:–

“ஐயப்பனை தரிசித்ததில் நான் மிகவும் மகிழ்ச்சியாக உள்ளேன். நாங்கள் எல்லோரும் பக்தர்கள். சபரிமலைக்குள் செல்வதற்கு என்னென்ன சடங்கு விதிகள் இருக்கின்றனவோ அத்தனையையும் நாங்கள் கடைபிடித்துள்ளோம்” என்றார் திருப்தி.

மேலும் 26 வயது அனன்யா, 30 வயது ரெஞ்சிமோல், 24 வயது அவந்திகா ஆகியோருடன் தாம் தரிசனம் செய்தார் என்றார் அவர்.

திருநங்கைகள் நான்கு பேருக்கும் சுமார் 20 பொலிஸார் புடைசூழ்ந்து பாதுகாப்பு தந்தனர். ஆனால் திருநங்கைகள் கோயிலினுள் செல்வதை தடுக்க எந்த போராட்டங்களையும் எதிர்கொள்ளவில்லை என்கிறது பொலிஸ்.

# அமெ. விதித்த தடையை மீறி ஈரானுடன் இந்தியா வர்த்தகம்



சர்வதேச வங்கிகள் ஊடாக அமெரிக்க டொலருக்குப் பதிலாக இந்திய ரூபா மூலம் பணத்தைச்செலுத்தி, மசகு எண்ணெய்யைப் பெற மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. இதன் மூலம் ஈரான் மீது அமெரிக்கா விதித்துள்ள பொருளாதாரத் தடை உடைத்தெறியப்பட உள்ளது.

ஈரான் மீதான அமெரிக்கா விதித்த பொருளாதாரத் தடையால், அந்நாட்டிடம் இருந்து, டொலர்களைக் கொடுத்து, மசகு எண்ணெய் இறக்குமதி செய்ய முடியாத நிலை இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து, இந்திய ரூபாவிலேயே பணத்தைச் செலுத்தி, மசகு எண்ணெய்யைப் பெற முடிவு செய்த இந்தியா, இதற்காக ஈரானோடு ஒப்பந்தம் செய்தது. இதன் அடிப்படையில், ஈரானிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் மசகு எண்ணெய்க்கான தொகையை, யூகோ வங்கியின் மூலம், ஈரானில் உள்ள 5 வங்கிகளில் செலுத்த மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

இவ்வாறு செலுத்தப்படும் ரூபாயைக் கொண்டு, ஈரான் தனக்குத் தேவையான, உணவுப் பொருள்கள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருள்களை வாங்கிக் கொள்ள இருநாடுகளிடையேயான ஒப்பந்தம் வழிவகை செய்திருக்கிறது.

# பிரதமர் மோடியை தூங்கவிடமாட்டோம்

## ராகுல் காந்தி சபதம்

விவசாயகடன்களைத்தள்ளுபடி செய்த அசாம் மற்றும் குஜராத் முதலமைச்சர்களைத் தூக்கத்தில் இருந்து எழுப்பிவிட்டோம், அதுபோன்று, பிரதமரையும் தூக்கத்தில் இருந்து எழவைப்போம் என்று காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி கூறியுள்ளார்.

மத்தியபிரதேசம், சத்தீஷ்கார் ஆகிய மாநிலங்களில் காங்கிரஸ் அரசுகள் சமீபத்தில் பதவியேற்ற, சில மணி நேரங்களில், விவசாயக்கடன்களை தள்ளுபடி செய்வதாக மாநிலங்களின் முதலமைச்சர்கள் அறிவித்தனர்.

இந்நிலையில், நாடு முழுவதும் விவசாய கடன்களை தள்ளுபடி செய்யும் வரை பிரதமர் மோடியை தூங்கவிடமாட்டோம் என்று காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி தற்போது தெரிவித்துள்ளார்.

மேலும், பா.ஜ.க ஆளும் குஜராத், அசாம் ஆகிய மாநிலங்களின் முதலமைச்சர்களும் விவசாயிகளுக்கு ஆறுதல் தரும் அறிவிப்புகளை வெளியிட்டுள்ளனர்.

சுமார் 600 கோடி ரூபா விவசாய கடன்கள் தள்ளுபடி அறிவிப்பை அசாம் மாநில முதலமைச்சர் வெளியிட்டார். கிராமப்புற மக்களின் 625 கோடி மின் கட்டண மீதியையும் தள்ளுபடி செய்து குஜராத் முதலமைச்சர் அறிவித்துள்ளார்.

இந்தநிலையில், பா.ஜ.க அரசுகளின் இந்த அறிவிப்பை காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி வரவேற்றுள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது ‘டுவிட்டர்’ பக்கத்தில்,

குஜராத், அசாம் மாநிலங்களின் முதலமைச்சர்களை காங்கிரஸ் கட்சி, தூக்கத்தில் இருந்து எழ வைத்து விட்டது. ஆனால், பிரதமர் இன்னும் ஆழ்ந்த தூக்கத்தில்தான் இருக்கின்றார். அவரையும் நாங்கள் எழவைப்போம் எனக் கூறியுள்ளார்.

# 58 பொருளாதாரக் குற்றவாளிகளை இந்தியா கொண்டு வர முயற்சியாம்!

புதுடில்லி, டிசெ.21

விஜய் மல்லையா மட்டுமல்லாமல் பொருளாதாரக் குற்றத்தில் ஈடுபட்டு, வெளிநாடு தப்பிச் சென்ற மொத்த 58 பேரை இந்தியா கொண்டு வர மத்திய அரசு திட்டமிட்டுள்ளது என்று இந்திய நாடாளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தான் ஏமாற்றியதாக கூறப்படும் பணத்தை மீட்பதை விட, தன்னை இந்தியா அழைத்து வருவதிலேயே மத்திய அரசு அதிக ஆர்வம் காட்டுவதாக விஜய் மல்லையா குற்றம்சாட்டி இருந்தார்.

இந்நிலையில், வெளிநாடு தப்பிச் சென்ற விஜய் மல்லையா, நீரவ் மோடி, மெகுல் சோக்சி, லலித் மோடி உள்ளிட்ட 58 பேரை இந்தியா கொண்டு வர சர்வதேச பொலிஸ் மூலம் சிவப்பு நோட்டீஸ் அனுப்பி, நாடு கடத்தும் கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட நாடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன என்று நேற்று முன்தினம் மத்திய அரசு தெரிவித்தது.

மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் தாக்கல் செய்த விரிவான பதில் அறிக்கையில், இந்த 58 பேரை இந்தியா கொண்டு வர அரசு மட்டுமின்றி சிபிஐ, அமலாக்கத்துறை உள்ளிட்ட விசாரணை அமைப்புக்கள் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

ஐக்கிய அமீரகம், இங்கிலாந்து, பெல்ஜியம், எகிப்து, அமெரிக்கா, ஆன்டிகுவே உள்ளிட்ட 16 நாடுகளிடம் நாடு கடத்துவது தொடர்பான கோரிக்கைகள் வைக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



காலைக்கதிர் Kalaikkathir



# சிரியாவில் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிரான யுத்தத்தில் வெற்றி என அதிபர் ட்ரம்ப் அறிவிப்பு

## அதனால் அங்கிருந்து அமெரிக்கப் படைகள் உடனடியாக வாபஸ்

*சிரியாவில் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிரான போரில் வெற்றி பெற்றுவிட்டோம் என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார். இதைத் தொடர்ந்து சிரியாவில் இருந்து அமெரிக்கப் படைகள் வெளியேறத் தொடங்கி விட்டன.*







சிரியாவில் அதிபர் ஆசாத்துக்கு ஆதரவான படையினருக்கும் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கும் இடையே நடைபெற்று வரும் சண்டை இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளது. ஐ.எஸ். தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டில் இருந்த சிரியாவின் பல்வேறு பகுதிகள் கூட்டுப் படைகளால் மீட்கப்பட்டு விட்டன. இந்த உள்நாட்டுச் சண்டையில், குர்து இனப் போராளிகளுக்கு ஆதரவாக அமெரிக்காவின் 2,000 வீரர்கள் சண்டையிட்டு வருகின்றனர்.

இந்நிலையில், அமெரிக்க அதிபர் டொனால்ட்ட்ரம்ப் தனது ட்விட்டர் பக்கத்தில் புதன்கிழமை வெளியிட்ட அறிவிப்பில், சிரியாவில் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிரான போரில் வெற்றி பெற்றுவிட்டோம். ஐ.எஸ். தீவிரவாதிகளை தோற்கடிக்க அனுப்பப்பட்ட அமெரிக்கப் படை வெற்றி பெற்றுவிட்டது. ஆதலால், சிரியாவில் இருந்து அமெரிக்க இராணுவம் வெளியேறும் எனத் தெரிவித்தார்.

அதிபர் ட்ரம்ப் அறிவிப்பு வெளியான சிறிதுநேரத்தில், வெள்ளை மாளிகையின் செய்தித்தொடர்பாளர் சாரா சாண்டர்ஸ் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில், சிரியாவில் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிரான போரில் அமெரிக்கா வெற்றி பெற்றுவிட்டது. அமெரிக்க இராணுவம் சிரியாவில் இருந்து வெளியேறத் தொடங்கிவிட்டது எனத் தெரிவித்தார்.

அதேசமயம், சிரியாவில் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிரான போரில் வெற்றி பெற்றுத்தான் அமெரிக்க இராணுவம் நாடு திரும்புகிறது. ஆனால், ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிரான உலகளாவிய போர், பிரசாரத்தில் அமெரிக்கா தொடர்ந்து ஈடுபடும் என்று பென்டகன் செய்தித் தொடர்பாளர் டானா வொய்ட் தெரிவித்தார்

இந்த உத்தரவைத் தொடர்ந்து சிரியாவில் இருந்து அடுத்த 24 மணி நேரத்தில் 2ஆயிரத்துக்கும் மேற்பட்ட அமெரிக்க இராணுவத்தினரும் நாடு திரும்ப வேண்டும் என்று அமெரிக்க அரசு உத்தரவிட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையே ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராக சிரியாவில் வெற்றி பெற்றதாக அதிபர் ட்ரம்ப் கூறியதற்கு பல்வேறு நாடுகள் கேள்வி எழுப்பியுள்ளன. இங்கிலாந்து பாதுகாப்புத்துறை அமைச்சர் டோபியாஸ் எல்வுட் ட்விட்டரில் வெளியிட்ட பதிவில், அதிபர் ட்ரம்பின் வார்த்தையைக் கடுமையாக மறுக்கிறேன். தீவிரவாதம் வேறுவழியில் உருமாறி வரும். ஐ.எஸ்.தீவிரவாதிகளின் அச்சுறுத்தல் அடங்கிவிடவில்லை எனத் தெரிவித்தார்.

அமெரிக்காவின் மூத்த செனட் உறுப்பினர் லிண்ட்சே கிரஹாம் கூறுகையில், சிரியாவில் இருந்து அமெரிக்கா வெளியேறும் முடிவு பல மோசமான விளைவுகளை உண்டாக்கும் என எச்சரித்துள்ளார்.

சிரியாவில் குர்து போராளிகளுக்கு ஆதரவாக அமெரிக்க படையினர் சண்டையிட்டு வந்த நிலையில், அமெரிக்க படையினர் வாபஸ் பெறத் தொடங்கியிருப்பது குர்து போராளிகள் மத்தியில் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஆனால், குர்து இன போராளிகளை துருக்கி அரசு தீவிரவாதிகளாக சித்திரித்து வருகிறது. விரைவில் குர்து இனத்தவர் மீது தாக்குதல் நடத்துவோம் என மிரட்டல் விடுத்து வந்தது. ஆனால் அமெரிக்க படைகள் இருக்கும் துணிச்சலில் குர்து இனத்தவர்கள் தைரியமாக இருந்தனர். இப்போது, அவர்கள் செல்வது குர்து போராளிகளுக்குக் கலக்கத்தை ஏற்படுத்தும்.

# ஆளில்லா விமானம் மூலம் தடுப்பூசி வனுவாட்டு தீவுக்கு விநியோகம்

போர்ட்விலா,டிசெ.21



பசிபிக்தீவுநாடான வனுவாட்டுவில் ஆளில்லா விமானம் மூலம் தடுப்பூசி மருந்துகள் விநியோகம் செய்யப்பட்டன.

வனுவாட்டு தீவு நாட்டில் 20 சதவீத குழந்தைகளுக்கு தடுப்பூசி மருந்துகள் கிடைப்பதில்லை. இதனால் அந்தக் குழந்தைகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இந்த நிலையில் அங்கு ஐ.நா. சபையின் குழந்தைகள் அமைப்பான யுனிசெவ் ஏற்பாட்டில் அந்தத் தீவில் உள்ள குழந்தைகளுக்கு வணிக ரீதியிலான ஆளில்லா விமானம் மூலம் தடுப்பூசி மருந்துகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

40 கி.மீ. மலைப்பகுதியைத் தாண்டி வந்து ஆளில்லா விமானம் இந்த தடுப்பூசி மருந்துகளை வழங்கி உள்ளது. சிறிய அளவிலான பெட்டியில் ஐஸ் கட்டிகள் வைத்து அதன் மத்தியில் தடுப்பூசி மருந்து பாட்டில்கள் வைத்து அந்த ஆளில்லா விமானம் எடுத்துச்சென்று இருக்கிறது. எதிர்காலத்தில் கடைக்கோடியில் உள்ள கிராமங்களுக்கு கூட ஆளில்லா விமானங்கள் மூலம் இப்படி மருந்துகள் போன்ற முக்கிய பொருள்களை வழங்குவதற்கு வழி பிறக்கும்.

இதுபற்றி 'யுனிசெவ்' அமைப்பின் செயல் இயக்குனர் ஹென்ரீட்டா போர் கூறும்போது, இன்றைக்கு ஆளில்லா விமானம் ஒரு சிறிய தொலைவுக்கு மருந்து கொண்டு சென்றிருப்பது உலகளாவிய சுகாதாரத்தில் பெரிய பங்களிப்பாக அமைந்துள்ளது. குழந்தைகளுக்கு தடுப்பூசி மருந்துகள் கிடைப்பதற்கு மிகப்பெரிய அளவில் போராட வேண்டியதிருக்கிறது. இந்த ஆளில்லா விமான தொழில் நுட்பம் மிகப்பெரிய மாறுதலை ஏற்படுத்தும். ஒவ்வொரு குழந்தைக்கும் இது தடுப்பூசி மருந்துகள் கிடைப்பதற்கு வழிவகுக்கும் என்று குறிப்பிட்டார்.

# 350 பெண்களைப் பலாத்காரம் செய்த மத போதகர் அது தமக்குள் இருக்கும் ஆவிகளின் வேலை என்கிறார்

## பிரேசிலில் இப்படி ஒரு சர்ச்சை; தலையைப் பிய்க்கிறது பொலிஸ்



சுமார் 350 பெண்களைப் பலாத்காரம் செய்தவர் எனக் குற்றம் சுமத்தப்பட்ட மத போதகர் ஒருவர் அக்குற்றங்களைத் தாம் செய்யவில்லை என்றும் தமக்குள் புகுந்துள்ள ஆவிகள் செய்துள்ளன என்றும் கூறி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார்.

பிரேசில் நாட்டை சேர்ந்த 76 வயதான ஜோ டெய்சீரா ஃபரியா ஒரு மதபோதகர். இவர் நோய்களை (குறிப்பாக மன நோய்களை) குணப்படுத்துவதாகக் கூறி வைத்தியம் பார்த்து வந்துள்ளார்.

இவரிடம் சிகிச்சைக்கு ஆண்கள், பெண்கள் என அனைவரும் வந்துள்ளனர். சமீபத்தில் டச்சு புகைப்பட கலைஞர் ஒருவரும் சென்றுள்ளார். சிகிச்சைக்கு பின்னர் அவர், அந்த மதபோதகர் மனநோயாளிகளின் உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டு பாலியல் பலாத்காரம் செய்கிறார் எனத் தனியார் தொலைக்காட்சிக்குப்பேட்டி அளித்தார்.

இவரின் இந்த புகாருக்கு பின்னர் சுமார் 350 பெண்கள் மதபோதகர் தங்களையும் பலாத்காரம் செய்தார் எனப் புகார் அளித்தனர். இதனால் அதிர்ச்சி அடைந்த பொலிஸார் அந்த மதபோதகரை நேரில் ஆஜராகும்படி உத்தரவிட்டனர்.

பொலிஸார் முன் ஆஜரான மதபோதகர் அளித்த வாக்குமூலம் பொலிஸாருக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

"எனக்குள் 30 டாக்டர்களின் ஆவிகள் உள்ளன. அதனால்தான் என்னால் பிறருக்கு சிகிச்சை அளிக்க முடிகிறது. மேலும், பெண்களை பலாத்காரம் செய்தது நான் அல்லன். என்னுள் இருக்கும் டாக்டர்களின் ஆவிகள் தான்." - எனத் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் இந்த விடயத்தில் அடுத்தக்கட்ட நடவடிக்கை என்னவென்பது தெரியாமல் பொலிஸார் குழப்பத்தில் உள்ளனர்.

# கிறிஸ்மஸ் தாத்தா வேடத்தில் ஒபாமா



அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதியான பராக் ஒபாமா, கிறிஸ்மஸை முன்னிட்டு கிறிஸ்மஸ் தாத்தா வேடமணிந்து வந்து குழந்தைகளுக்கு இன்ப அதிர்ச்சி அளித்தார்.

கிறிஸ்மஸ் தாத்தா தொப்பி அணிந்து பை நிறைய பரிசு பொருள்களைக் கொண்டு தேசிய குழந்தைகள் மருத்துவமனைக்கு சென்ற ஒபாமாவை பார்த்து அந்த மருத்துவமனையில் இருந்த குழந்தைகள் சந்தோசத்தில் துள்ளி குதித்தனர்.

ஒபாமாவை உற்சாகத்துடன் வரவேற்ற அந்த மருத்துவமனைப் பணியாளர்களுக்கு தன் நன்றியை ஒபாமா தெரிவித்து கொண்டார்.

ஒபாமா கிறிஸ்மஸ் தாத்தாவாக வலம் வரும் வீடியோவை தேசிய குழந்தைகள் மருத்துவமனை தங்களது ட்விட்டர் பக்கத்தில் பகிர்ந்து உள்ளது.

## புதிய அரசமைப்பின் ஊடாக

# நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைக்கு சமாதிகட்ட வேண்டும்

## சபையில் சரவணபவன் எம்.பி. வலியுறுத்து



கொழும்பு, டிசெ.21

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையால் நாட்டின் அனைத்துத் தரப்பு மக்களுக்குமே சிக்கலும் பிரச்சினைகளும் அதிகமாகவே இருக்கின்றன. எனவே, அதனை நீக்கிவிட்டு மாற்று வழிகளைச் சிந்திக்க வேண்டியது அவசியம். அதனைப் பொறுமையோடும் புதிய அரசமைப்பின் ஊடாகவும் செய்வதுதான் புத்திசாலித்தனமும்கூட. அதைவிடுத்து கடந்த சில மாதங்களாக நடந்த சம்பவங்களின் அடிப்படையில் உணர்ச்சிவசப்பட்டு, பழிவாங்கும் வகையில் அவை நடந்தேறிவிடக்கூடாது.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிப்பது தொடர்பில் நாடாளுமன்றத்தில் ஜே.வி.பி. சமர்பித்த சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீது நேற்று முன்தினம் இரண்டாவது நாளாகவும் விவாதம் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே சரவணபவன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மழைவிட்டும் தூவானம் விடவில்லை என்பதைப் போல பிரதமர் யார் என்கிற சர்ச்சையில் இருந்து இப்போது எதிர்க்கட்சித் தலைவர் யார் என்கிற சர்ச்சைக்கு நகர்ந்திருக்கின்றோம். நிறைவேற்று ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்ஷ, தனக்குப் பதவி ஆசை இல்லை என்று பிரதமர் பதவிக்கான அடிதடியின்போது இந்தச் சபையிலேயே கூறியிருந்தார். ஆனால், இப்போது எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு அவர் மீண்டும் போட்டி போடுவதைப் பார்க்கும்போது பதவி ஆசை யாரைத்தான் விட்டு வைத்தது என்று எண்ணத் தோன்றுகின்றது.

2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின்போது நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை முற்றாக ஒழிப்பேன் என்று வாக்குறுதி வழங்கிய இன்றைய ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேன, அந்த வாக்குறுதியிலிருந்து வழுகுவதன் காரணமாகவே அவர் பதவியில் இருக்கும்போதே நிறைவேற்று அதிகாரத்தை முற்றுமுழுதாக ஒழிக்க வேண்டும் என்கிற கோரிக்கையை நாம் வலியுறுத்த வேண்டியதாக உள்ளது.

"நாட்டை நிர்வகிப்பது அமைச்சரவை அல்ல; நாடாளுமன்றம் அல்ல; இந்த நாட்டை ஒரு குடும்பமே ஆட்சி செய்கின்றது. அதனூடாக நாடு உறுதித்தன்மையை இழந்துள்ளது. இந்த நிலை நீடித்தால் நாட்டில் பாரதூரமான நிலைமை ஏற்படும். ஆகையால் நாட்டின் அரசியல் உறுதிப்பாட்டை வலுப்படுத்தி நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கு இந்த நாட்டில் சட்டவாட்சியை நாடாளுமன்றத்தின் ஊடாக உறுதிப்படுத்தி அனைத்தையும் பாதுகாத்து அரசியல் உறுதிப்பாட்டை உறுதிப்படுத்தும் முக்கிய பொறுப்பை ஏற்றுள்ளேன். நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமையை நூறு நாள்களுக்குள் நாடாளுமன்றத்தின் ஒத்துழைப்போடு இரத்துச் செய்து, அமைச்சரவை ஊடாகப் நாடாளுமன்றத்துடன் இணைந்து நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரசமைப்பொன்றை உருவாக்குவதே இந்தத் தேர்தல் விஞ்ஞாபனத்தின் முக்கிய இலக்காகும் என்று தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் மக்களுக்கு வாக்குறுதி அளித்திருந்தார் ஜனாதிபதி.

1978ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட இந்த ஜனாதிபதி முறைமையால் நாட்டு மக்கள் சொல்லொணாத் துயரத்தை அனுபவித்த பின்னர், காட்டுத்தனமான சர்வாதிகாரப் போக்குடைய ஒருவரின் கையில் இந்த அதிகாரங்கள் சென்றதன் விளைவாக இந்த நாடே அவரது குடும்பச் சொத்தாக மாற்றப்பட்டதன் விளைவை வெறுத்ததன் பின்னர், நிறைவேற்று ஜனாதிபதி முறைமையே வேண்டாம் என்று இந்த நாட்டு மக்கள் கொந்தளித்துக் கிடந்தபோதுதான் மைத்திரிபால சிறிசேன நிறைவேற்று அதிகாரத்தை 100 நாட்களுக்குள் முற்றாக ஒழிப்பேன் என்று கூறினார். அவரது அந்த வாக்குறுதியையும் நம்பித்தான் மக்கள் அவருக்கு வாக்களித்தார்கள். குறிப்பாகத் தமிழ், முஸ்லிம் மக்களும் முற்போக்குச் சிங்கள மக்களும் அவருக்கு வாக்களித்தார்கள்.

ஆனால், 19ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக நிறைவேற்று ஜனாதிபதிப் பதவியின் அதிகாரங்கள் வெட்டிக் குறைக்கப்பட்டன. எனினும், முற்றாக அழிக்கப்படவில்லை. இரண்டாவது தடவையாக நிறைவேற்று ஜனாதிபதியாகும் எண்ணம் தமக்கில்லை என்று மைத்திரிபால சிறிசேன ஏற்கனவே கூறியிருந்ததன் அடிப்படையில் நிறைவேற்று அதிகார முறைமையை முற்றிலுமாக அழிப்பதற்கு அவர் ஒருபோதும் எதிராக இருக்க மாட்டார் என்கிற நம்பிக்கையிலேயே பெரும்பான்மையான மக்கள் அவருக்கு வாக்களித்தார்கள். ஆனால், ஆணைப் பெண்ணாகவும் பெண்ணை ஆணாகவும் மாற்றுவதற்கான அதிகாரத்தைத் தவிர மிகுதி அனைத்து அதிகாரங்களையும் வழங்கும் ஜனாதிபதிப் பதவியில் இருந்த பின்னர் மீண்டும் அந்தப் பதவியில் அமர்வதற்கும் அதிகாரத்தைக் கையிலெடுத்துக் கோலோச்சுவதற்கும் அவர் தயாராகிவிட்டார் என்பது கவலைக்குரியது. அவரது இந்த உள்நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காகவே அண்மையை அரசியல் நெருக்கடியையும் குழப்பங்களையும் ஏற்படுத்தினார் என்றும்கூட விமர்சிக்கப்படுகின்றது என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது.

"கடந்த மூன்றரை வருடங்களுக்கு மேலாக இலங்கையின் ஜனாதிபதியாகச் செயற்பட்டு வரும் என்னால், நாடும் அரசும் அடைந்திருக்கும் முன்னேற்றத்தைப் பற்றி மிகவும் மகிழ்ச்சியடையக் கூடியதாக உள்ளது. 2015 ஜனவரி 8ஆம் திகதி மக்களின் வாக்குகளால் தெரிவுசெய்யப்பட்டு இலங்கையின் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றபோது, எனது நாட்டில் தற்போது நான் வகிக்கும் பதவிக்காக வழங்கப்பட்டிருந்த எல்லையற்ற நிறைவேற்று அதிகாரங்கள், அதாவது ஓர் அரசனுக்கும் அப்பால் பேரரசனுக்கான அதிகாரங்களுக்குச் சமமாக இருந்த எல்லையற்ற அதிகாரங்களை, இந்தக் காலகட்டத்தில், அந்தப் பதவியை ஏற்கின்ற ஓர் அரச தலைவன் என்ற வகையிலும் ஒரு மனிதன் என்ற வகையிலும் முன்னெடுக்க வேண்டிய மிக முக்கியமான வரலாற்றுக்கடமையாக இருந்த, எனக்குக் கிடைத்திருந்த அந்த எல்லையற்ற அதிகாரங்களைக் குறைத்து அவற்றை இலங்கையின் நாடாளுமன்றத்துக்குக் கையளிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டேன் என்பதை இங்கே தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன் என்று கடந்த செப்டெம்பர் மாதம் 28ஆம் திகதி ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் உரையாற்றும்போதுகூட ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன தெரிவித்திருந்தார். ஆனால், அந்த உரை ஆற்றப்பட்டு ஒரு மாத காலம் முடிவதற்குள்ளாகவே, எந்த அதிகாரத்தைத் தான் இழந்ததை பெருமைப்படும் விடயம் என்று கூறியிருந்தாரோ அதேபோன்று எஞ்சிய அதிகா ரங்களையும் முடிவுக்குக் கொண்டு வருவதற்கு அவர் முன்வந்து செயற்பட்டிருக்க வேண்டும். ஆனால் அது நடக்கவில்லை. ஜனாதிபதி இந்த உரையை ஆற்றுவதற்கு ஒரு வருடம் முன்னதாக 2017ஆம் ஆண்டு ஐ.நா. பொதுச் சபையில் ஆற்றிய உரையும் இங்கு குறிப்பிட்டுக் கூறப்படவேண்டியது.

"2015 ஜனவரியில் இலங்கை ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப் பட்டிருந்தேன். அவ்வாறு தெரிவு செய் யப்பட முன்னர் எனது அன்புக்குரிய நாட்டு மக்களுக்கு பல வாக்குறுதிகளைக் கொடுத்திருந்தேன். அதில் நான் விசேடமாக குறிப்பிட்ட விடயம், உலகில் எந்தவொரு நாட்டுத் தலைவருக்கும் இல்லாத அதிகாரங்கள் இலங்கையின் ஜனாதிபதிக்கு இருப்பதனால் நான் ஆட்சிக்கு வந்த வுடன் அந்த அதிகாரங்களை ஜனாதிபதிப் பதவியிலிருந்து விலக்கி நாட்டின் நாடாளுமன்றத்திடம் ஒப்படைப்பதான வாக்குறுதியாகும். ஆட்சிக்கு வந்த தலைவர், அரசமைப்புக்கமைய அளவற்ற அதிகாரங்களுடன் ஆட்சியில் இருக்கும்போது அந்த அதிகாரங்களை மீள ஒப்படைத்த அரச தலைவரென்ற ரீதியில் எனது நாட்டுக்கும் சர்வதேசத்திற்கும் அதிகாரத்தை கைவிடுவது தொடர்பான முன்மாதிரியை நான் வழங்கியுள்ளேன். ஜனநாயகத்தை பாதுகாத்து போசிக்கும் நாடுகளில் ஆட்சிக்குவரும் தலைவர்கள், ஜனநாயகத்தை பாதுகாப்பதற்கும் அதிகாரத்தை உரியவாறு பயன்படுத்துவதற்கும், நியாயமான சமூகத்தை கட்டியெழுப்புவதற்காகதமது அதிகாரத்தை பயன்படுத்துவது மிகவும் முக்கியமானதாகும். ஆயினும், கடந்த பல தசாப்தங்களாக உலக வரலாற்றை நோக்கும்போது பல தலைவர்கள் அதிகாரத்திலிருந்து விலகிச் செல்ல விரும்பாமை காரணமாக அந்த நாட்டின் சமாதானம் சீர்குலைவுடன் அது சர்வதேச ரீதியிலான பல்வேறு விதமான பிரிவுகளுக்கும் காரணமாக இருப்பதனைக் காணமுடிகின்றது. அவ்வாறானவரலாற்றுத் தகவல்கள் பற்றிய, உள்நாட்டு வெளிநாட்டு ஏராளமான அனுபவங்கள் எமக்கு இருக்கின்றன. அவ்வாறானநிலைமையில் எனது நாட்டில் ஜனநாயகத்தை உறுதிப்படுத்தி ஏகாதிபத்திய அரசியலை கொண்டு நடத்திய அரசியல் குழுக்களை அகற்றி நாட்டில் மக்களின் சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் உறுதிப்படுத்தி, ஜனநாயகத்தை பாதுகாத்து அடிப்படை உரிமைகளை மேம்படுத்தி கடந்த இரண்டரை ஆண்டுகளாக வெற்றிகரமாக பயணித்துள்ளேன் என்பதை இந்த கௌரவம் மிக்க சபையில் தெரிவித்துக் கொள்கிறேன் என்று தனது உரையில் அப்போது ஜனாதிபதி மைத்திரிபால தெரிவித்திருந்தார்.

அவரது இந்த உரையில் தீர்க்க தரிசனத்துடன் அவர் கூறியிருந்த ஒரு விடயம் கவனிக்கப்படவேண்டியது. "கடந்த பல தசாப்தங்களாக உலக வரலாற்றை நோக்கும்போது பல தலைவர்கள் அதிகாரத்திலிருந்து விலகிச் செல்ல விரும்பாமை காரணமாக அந்த நாட்டின் சமாதானம் சீர்குலைவுடன் அது சர்வதேச ரீதியிலான பல்வேறு விதமான பிரிவுகளுக்கும் கரணமாக இருப்பதனைக் காணமுடிகின்றது" என்று அவர் கூறியிருக்கிறார். அதுபோன்றே அதிகாரத்திலிருந்து விலகிச் செல்ல ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விரும்பாததன் காரணமாகவே இலங்கையிலும் சமாதானம் சீர்குலைந்தது என்பதை கடந்த சில மாதங்களாகக் கண்கூடு கண்டுள்ளோம்.

எப்படியிருந்தாலும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிப்பேன் என்று நாட்டு மக்களுக்குத் தான் வழங்கிய வாக்குறுதியை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த நாடாளுமன்றத்துடன் சேர்ந்து நிறைவேற்றவேண்டும். அத்தகைய முயற்சிகள் எதற்கும் அவர் முட்டுக்கட்டை போட முற்படக்கூடாது.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழிப்பது, பெரும்பான்மையில் மட்டும் தங்கியிருக்கும் நாடாளுமன்றத்தின் அதிகாரத்தை சமநிலைப் படுத்துவதற்கான பொறிமுறையைச் சிதைக்கும் நடவடிக்கை என்கிற கவலை, கரிசனை தமிழ், முஸ்லிம், மலையகச் சமூகங்களுக்கு இருக்கின்றது என்பதை நான் மறக்கவில்லை.

நாட்டின் அதிகார மையங்களைத் தீர்மானிப்பதில் தமிழ், முஸ்லிம், மலையகச் சமூகங்களின் வகிபாகத்தை அல்லது பலத்தை நிலைநாட்டக்கூடிய வாய்ப்பை நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை தருகின்றது என்கிற கருத்தை அண்மையில் இந்த விவகாரம் பேசு பொருளான போது இந்த அவையில் அமர்ந்திருக்கும் பல கட்சிகளின் கௌரவ தலைவர்கள், உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியிருந்தார்கள். எனினும், அவர்களின் கருத்தும்கூட நிறைவேற்று அதிகார முறையை முற்றிலும் ஒழிப்பதற்கு எதிரானது இல்லை.

தமிழ், முஸ்லிம், மலையகச் சமூகங்களின் உரிமைகள் அரசமைப்பின் ஊடாகமுழுமையாக உறுதிப்படுத்தப்பட்டு எல்லாச் சமூக மக்களும் இலங்கை நாட்டில் சமத்துவமாக வாழமுடியும் என்கிற சூழல் ஒன்று ஏற்படுத்தப்படுவதற்கு முன்னர் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை யை ஒழிக்கப்படுவது ஆபத்தானது என்கிற கரிசனை காரணமாகவே அவர்கள் இந்த எதிர்ப்பை முன்வைத்திருந்தார்கள். அது முற்றிலும் உண்மையும்கூட.

மூன்றில் இரண்டுக்கும் அதிகமான பெரும்பான்மை உறுப்பினர்களைச் சிங்களவர்களாகக் கொண்ட இந்தச் சபையில் தமிழ், முஸ்லிம், மலையகச் சமூகங்களின் உரிமைகள் முறைப்படி உறுதிப்படுத்தப்படாத நிலையில் நிறைவேற்று அதிகார முறைமையையும் ஒழித்துவிடுவது கரிசனைக்குரிய செயல்தான்.

மலையகத்தில் இருந்து தமிழர்கள் இந்தியாவுக்குத் திருப்பியனுப்பப்பட்டமைக்கு நாடாளுமன்றத்தில் சிங்களவர்கள் பெரும்பான்மையாக இருப்பதே முக்கியகாரணம் என்பதை மறந்துவிட முடியாது. அதுபோன்ற ஆபத்துக்கள் பற்றிச் சிந்திக்காமல் இருக்கும் அளவுக்கு இந்தச் சபையில் உள்ள உறுப்பினர்கள் புனிதர்களோ, பகுத்தறிவாளர்களோ இல்லை என்பதைக் கடந்த சில வாரங்களில் நிரூபித்திருக்கின்றார்கள். எனவே, நாடாளுமன்றப் பெரும்பான்மை அதிகாரத்தைச் சமநிலைப்படுத்தி தமிழ், முஸ்லிம், மலையக மக்களுக்கு ஓரளவுக்குப் பாதுகாப்பை வழங்கக்கூடிய சமநிலைத் தன்மையை நிறைவேற்று ஜனாதிபதி முறைமை கொண்டிருக்கின்றது என்பது உண்மைதான்.

ஆனால், ஜனாதிபதியாக ஒரு கட்சியைச் சேர்ந்தவர் இருக்கும்போதும் நாடாளுமன்றத்தின் கட்டுப்பாட்டை மற்றொரு கட்சியைச் சேர்ந்தவர்களும் வைத்திருக்கும்போதும்தான் அத்தகையதொரு சமநிலைத் தன்மை இருக்கமுடியும். இரு அதிகாரங்களுமே ஒரே கட்சியைச் சேர்ந்தவர்களிடம் இருக்கும்போது இதே தமிழ், முஸ்லிம், மலையகச் சமூகம் இரு குழல் பீரங்கித் தாக்குதலுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும் என்பதை மறந்துவிட முடியாது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் அதுதான் நடந்தது என்பதையும் மறந்துவிட முடியாது.

எப்படிப் பார்த்தாலும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையால் நாட்டின் அனைத்துத் தரப்பு மக்களுக்குமே சிக்கலும் பிரச்சினைகளும் அதிகமாகவே இருக்கின்றன. எனவே, அதனை நீக்கிவிட்டு மாற்று வழிகளைச் சிந்திக்க வேண்டியது அவசியம். அதனைப் பொறுமையோடும் புதிய அரசமைப்பின் ஊடாகவும் செய்வது தான் புத்திசாலித்தனமும்கூட. அதைவிடுத்து கடந்த சில மாதங்களாக நடந்த சம்பவங்களின் அடிப்படையில் உணர்ச்சிவசப்பட்டு, பழிவாங்கும் வகையில் அவை நடந்தேறிவிடக் கூடாது – என்றார்.

# நிறைவேற்றதிகாரத்தை நீக்குவது நாட்டுக்குச் செய்யும் துரோகமாம்

## கூறுகிறார் அத்துரலியே ரத்ன தேரர்

கொழும்பு, டிசெ. 21

நிறைவேற்று அதிகாரத்தை நீக்கினால் அது நாட்டுக்குச் செய்யும் துரோகம் என நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று முன் தினம் புதன்கிழமை நாடாளுமன்ற அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.



அவர் மேலும் குறிப்பிடுகையில்–

எந்த எதிர்க்கட்சியில் இருந்தாலும், நாட்டின் நலனுக்கு எதிரான செயற்பாடுகளுக்கு எதிராக நான் குரல்கொடுப்பேன். நாங்கள் பயங்கரவாதத்தை ஒழிக்க அரசு எடுத்த தீர்மானத்திற்கு இணங்கி அப்போது செயற்பட்டோம்.

பெரும்பான்மை இல்லாத அரசேதற்போது உள்ளது. இதனை வீழ்த்த விரும்பவில்லை. காபந்து அரசாக, பொறுப்பு வாய்ந்த அரசாகச் செயற்பட வேண்டும்.

இன்று ஏற்பட்டுள்ள அரசியல் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும். இதற்கு இருசாராரும் இணைந்து செயற்படவேண்டிய பல விடயங்கள் உள்ளன.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட அதிகாரத்தை நீக்க வேண்டுமெனக் கூறுகின்றனர். அதற்கு முன்னர் நாட்டின் ஸ்திரத்தன்மை பற்றிச் சிந்திக்கவேண்டும். நிறைவேற்று அதிகாரத்தை நீக்கினால் அது நாட்டுக்குச் செய்யும் துரோகமாகும்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையில் பல குறைபாடுகள் உள்ளன. பிரச்சினைக்குரிய விடயங்களை இணக்கப்பாடுகளுடன் திருத்தவேண்டும்–என்றார். (ஐ)

# மஹிந்தவுடனான உறவில் பாதிப்பு ஏதுமே ஏற்படாது

## ஜனாதிபதி மைத்திரி உறுதி

கொழும்பு, டிசெ. 21

பிரதமர் பதவியில் ஏற்பட்ட மாற்றத்தினால் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடனான உறவில் மாற்றம் ஏற்படப்போவதில்லை. நாங்கள் இணைந்து பரந்துபட்ட அரசியல் கூட்டணியை ஏற்படுத்தவுள்ளோம் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டுள்ளார்.



இந்திய ஊடகமான இந்துஸ்தான் ரைம்ஸுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வழங்கிய பேட்டியொன்றிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்–

நாங்கள் ஜனநாயக அரசியல் சக்தியாகப் பணியாற்றவுள்ளோம். அத்துடன் பல கட்சிகளை இணைத்துக்கொண்டு பரந்துபட்ட அரசியல் கூட்டணியை ஏற்படுத்திச் செயற்படுவதற்கு நாம் நடவடிக்கைகளை முன்னெடுப்போம்.

நாட்டில் இடம்பெற்ற அரசியல் குழப்பநிலையால், முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவுடனான உறவில் மாற்றம் ஏற்படப்போவதில்லை.

அத்துடன் ஊழல் நடவடிக்கைகளுக்கு எதிரான எனது போராட்டத்தை நான் தொடர்ந்தும் முன்னெடுப்பேன். இலஞ்ச ஊழல், அரசியல் அச்சுறுத்தல்கள், வன்முறைகள் போன்ற பாதகமான நடவடிக்கைகளை இல்லாதொழித்து புதிய கலாசாரத்தை உருவாக்குவதே எனது நோக்கம்.

நான் எனது நாட்டு மக்களின் தேசத்தின் நலனுக்காக எனது பதவிக்காலம் முழுவதும் நிறைவேற்று அதிகாரங்களைத் தொடர்ந்தும் பயன்படுத்துவேன்–என்றார். (ஐ)

# கொழும்பு மாநகர சபை பட்ஜெட் 60 வாக்குகளினால் நிறைவேற்றம்

கொழும்பு, டிசெ. 21

கொழும்பு மாநகர சபையின் 2019 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் 60 வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நேற்று முன் தினம் நடைபெற்ற பட்ஜெட் மீதான வாக்கெடுப்பில் 77 பேர் ஆதரவாகவும், 17 உறுப்பினர்கள் எதிராகவும் வாக்களித்ததுடன் 16 பேர் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. எட்டுப் பேர் அமர்வில் பங்கேற்கவில்லை.

இந்த வரவு-செலவுத் திட்டத்தைக் கொழும்பு மாநகர சபை மேயர் ரோஸி சேனநாயக்க முன்வைத்தார். முதல் பெண் மேயராக வரவு-செலவுத் திட்டத்தைத் தாக்கல் செய்த பெருமையை ரோஸி சேனநாயக்க பெற்றார்.

அத்தோடு அங்கு உரையாற்றிய அவர், தனது சிறந்த தொரு வேலைத்திட்டத்தின் ஊடாக கொழும்பில் உள்ள மக்களின் நலனுக்காகப் பணிபுரிவேன் எனவும் தெரிவித்தார். (ஐ)

# ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு சந்தா கட்டுகிறாராம் மஹிந்த!

கொழும்பு, டிசெ. 21

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினராகவே இருக்கிறார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் செனவிரத்ன தெரிவித்தார்.



கொழும்பில் நேற்று முன் தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மஹிந்த ஒவ்வொரு மாதமும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு அங்கத்துவக் கட்டணத்தைச் செலுத்துகிறார். 3000 ரூபாவைத் தனது நாடாளுமன்றச் செலவுகளில் குறைத்துக் கொள்வதற்கு அவர் அனுமதியளித்துள்ளார்.

அதனடிப்படையில் முன்னாள் ஜனாதிபதி மாதாந்தக் கட்டணம் செலுத்துவதனால் அவர் கட்சி உறுப்பினராக இருப்பதற்கான அனைத்துத் தகுதிகளும் உள்ளன.

அத்துடன் அவர் கட்சியின் ஆலோசகராக இருக்கிறார். கடந்த மாநாட்டின்போதும் அவர் ஆலோசகராக நியமிக்கப்பட்டார். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவர் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை-என்றார். (ஐ)

# ஜனவரி 9 இற்கு பின் ஜனாதிபதித் தேர்தல்!

கொழும்பு, டிசெ. 21

அடுத்த வருடம் ஜனவரி 9 ஆம் திகதிக்கு பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் இருப்பதாகத் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.



காலிப் பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். மாகாண சபை தேர்தலை உடனடியாக நடத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் மேலும் கூறினார். (ஐ)

# ஸ்ரீ லங்கன் எயார், மிஹின் லங்கா முறைகேடு; ஜனாதிபதி ஆணைக்குழு பதவிக்காலம் நீடிப்பு

ஸ்ரீ லங்கா எயார் லைன்ஸ் நிறுவனம், வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா கேடரிங் நிறுவனம் மற்றும் வரையறுக்கப்பட்ட மிஹின் லங்கா தனியார் நிறுவனம் ஆகியவற்றில் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படும் முறைகேடுகளை கண்டறிவதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் பதவிக்காலம் 2019 பெப்ரவரி 15 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.




2006 ஜனவரி மாதம் 01 ஆம் திகதி முதல் 2018 ஜனவரி மாதம் 31ஆம் திகதி வரையான காலப் பகுதியில் அந்த நிறுவனங்களில் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படும் முறைகேடுகள் குறித்து கண்டறிவதற்காக ஜனாதிபதியினால் 2018 பெப்ரவரி 14 ஆம் திகதி இந்த ஆணைக்குழு நியமிக்கப்பட்டதுடன், அதன் பதவிக்காலம் இம்மாதம் டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைவதாக இருந்தது.

நேற்று முன் தினம் முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஆணைக்குழுவின் உறுப்பினர்களைச் சந்தித்த ஜனாதிபதி, அவ்விசாரணை நடவடிக்கைகளின் முன்னேற்றம் குறித்து கேட்டறிந்தார்.

ஆணைக்குழுவின் தலைவர் ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் அனில் குணரத்ன உள்ளிட்ட ஆணைக்குழு உறுப்பினர்கள் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர். (ஐ)

# பஸ் சாரதி தாக்குதலில் சாவு

கொழும்பு, டிசெ. 21

வெலிமடைப் பிரதேசத்தில் தனியார் பஸ் சாரதி ஒருவர் மீது இலங்கை போக்குவரத்துச் சபை சாரதி மற்றும் உதவியாளர் மேற்கொண்ட தாக்குதலில் சாரதி உயிரிழந்துள்ளார்.

வெலிமடை பஸ் தரிப்பு நிலையத்திற்கு அருகில் நேற்று முன்தினம் பிற்பகல் 2.00 மணி அளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர தெரிவித்தார்.

பஸ் தரிப்பு நிலையத்துக்கு அருகிலுள்ள மருந்தகத்துக்கு முன்னால் வைத்து அந்த தனியார் பஸ் சாரதி மீது, இலங்கைப் போக்குவரத்துச் சபைச் சாரதி மற்றும் உதவியாளர் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

நேரம் தொடர்பாக ஏற்பட்ட பிரச்சினையை அடுத்து இந்தத் தாக்குதல் சம்பவம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவத்தில், குருத்தலாவைப் பிரதேசத்தைச் சேர்ந்த, காமினி வசந்த குமார எனும் 49 வயதான நபர் ஒருவரே உயிரிழந்துள்ளார்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தை மேற்கொண்ட சாரதி மற்றும் நடத்துநர் ஆகியோர் சிகிச்சைக்காக மீரகஹவத்தை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து சந்தேகநபர்கள் சிகிச்சை பெறுவதற்காக பொலிஸ் பாதுகாப்பில் தியத்தலாவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தின் போது இலங்கைப் போக்குவரத்துச் சபையைச் சேர்ந்த பஸ் சாரதி மற்றும் நடத்துநர் ஒருவரும் இதற்கு ஒத்துழைப்பு வழங்கி உள்ளார் எனத் தெரிவிக்கப்படும் நிலையில் இருவரும் வெலிமடை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஐ)

# கழகங்களுக்கான உலகக் கிண்ணம் ரியல் மட்ரிட் அணி இறுதிப் போட்டிக்கு



பீபா கழகங்களுக்கிடையிலான உலகக் கிண்ணத் தொடர், தற்போது விறுவிறுப்புக்கு பஞ்சமில்லாமல் நடைபெற்று வருகின்றது.

ஏழு முன்னணி கழக அணிகள் பங்கேற்று விளையாடிவரும் இத்தொடர், தற்போது ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெற்று வருகின்றது.

இறுதிக் கட்டத்தை எட்டியுள்ள இத்தொடரில் நேற்றுமுன்தினம் அரையிறுதிப் போட்டி யொன்று நடைபெற்றது.

இந்த அரையிறுதிப் போட்டியில், ரியல் மட்ரிட் அணியும், கஷீமா அன்ட்லர்ஸ் அணியும் பலப்பரீட்சை நடத்தின.

இரசிகர்களுக்கு உச்ச விறுவிறுப்பை கொடுத்த இப்போட்டியில், ரியல் மட்ரிட் அணி 3:1என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது.

இப்போட்டியில், முற்பாதியில் இரு அணி வீரர்களும் சிறப்பாக விளையாடினர்.

எனினும், ரியல் மட்ரிட் அணியின் நட்சத்திர வீரரான கரேத் பலேவை மட்டும் கஷீமா அன்ட்லர்ஸ் அணியால் கட்டுப்படுத்த முடியவில்லை.

மைதானத்தில் பம்பரமாய் சுழன்ற கரேத் பலே, 44ஆம், 53ஆம் மற்றும் 55ஆம் நிமிடங்களில் ஹட்ரிக் கோல் அடித்து இரசிகர் களை இன்ப வெள்ளத்தில் ஆழ்த்தினார்.

ஆனால் கஷீமா அன்ட்லர்ஸ் அணியால், வெறுமனே ஒரு கோல் மட்டுமே போட முடிந்தது. இந்த கோலை அணியின் வீரரான ரோமா டோய் 78ஆவது நிமிடத்தில் அடித்து அணியை சற்று ஆறுதல் படுத்தினார்.

இதற்கமைய போட்டியின் இறுதியில் ரியல் மட்ரிட் அணி, 3:1 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு முன்னே றியது.

நாளை நடைபெறவுள்ள இறுதிப் போட்டி யில், ரியல் மட்ரிட் அணியும், அல் அய்ன் அணியும் பலப்பரீட்சை நடத்தவுள்ளன. (ஐ)

# அந்தாட்டிக்காவில் ஐஸ் மரதன் போட்டி!



திகில் நிறைந்த அண்டார்டிகா பனி மலைப் பகுதியில் இடம்பெற்ற, ஐஸ் மரதன் போட்டி, வெற்றிகரமாக நிறைவுக்கு வந்துள்ளது.

உலகில் நடைபெறும் தீவிரமான பந்த யங்களில் ஒன்றாக பார்க்கப்படும் ஐஸ் மரதன் போட்டி, இலங்கை, இந்தியா, சீனா, ஆஸ்தி ரியா, போலந்து, ஆஸ்திரேலியா, சுவிஸ்ஸர் லாந்து லித்துவேனியா என 15 வெவ்வேறு நாடுகளில் இருந்து 57 போட்டியாளர்கள் கலந்துக் கொண்டனர்.

கடந்த ஆண்டை விட கடுமையான பனி யுடன் போட்டியில் கலந்துகொண்ட போட்டி யாளர்கள், ஆண்கள் பெண்கள் என இரு பிரிவுகளில் போட்டியிட்டனர்.

கடும் குளிரை எதிர்கொள்ளும் வகையில் சப்பாத்து, கையுறை, கண்ணாடி, உடை என பாதுகாப்புடன் வீரர், வீராங்கனைகள் இப்போட்டி யில் கலந்து கொண்டனர்.

ஆண்கள் பிரிவில் போலந் தின் பியோட்டர் சுக்கேனியா, பந்தயத் தூரத்தை 3 மணித்தி யாலங்கள் 49:18 நிமிடங்களில் கடந்து முதலிடம் பிடித்தார்.

இவரையடுத்து, ஆஸ்திரே லியாவின் ஜசக் தைர், பந்தயத் தூரத்தை 4 மணித்தியாலங் கள் 19 நிமிடங்களில் கடந்து இரண்டாமிடம் பிடித்தார்.

ஆஸ்திரியாவின் அலெக் சாண்டர் ருடிகர், பந்தயத் தூரத்தை 4 மணித்தியாலங்கள் 31:57 நிமிடங்களில் கடந்து மூன்றாமிடம் பிடித்தார்.

பெண்கள் பிரிவில் லித்துவேனியா ரோமா புஷியென், பந்தயத் தூரத்தை 5 மணித்தி யாலங்கள் 3:32 நிமிடங்களில் கடந்து முதலிடம் பிடித்தார்.

இவரையடுத்து, ஆஸ்திரேலியாவின் நடாலி அர்னால்ட், பந்தயத் தூரத்தை 6 மணித்தியாலங்கள் 15:14 நிமிடங்களில் கடந்து இரண்டாமிடம் பிடித்தார்.

இந்தியாவின் குர்மிட் சோனி பாலா, பந்த யத் தூரத்தை 6 மணித்தியாலங்கள் 55:46 நிமிடங்களில் கடந்து மூன்றாமிடம் பிடித் தார்.

# அதிகம் எதிர்பார்க்கப்பட்ட யுவராஜ் ஏமாற்றத்தில் சென்னை ரசிகர்கள்

சென்னை ரசிகர்க ளால் அதிகம் எதிர்பார்க் கப்பட்ட யுவராஜ் சிங்கை மும்பை இந்தியன்ஸ் அணி அடிப்படை விலைக்கு ஏலம் எடுத்துள்ளது.

இந்தியன் பிரீமியர் லீக் 2019ம் ஆண்டு தொடருக் கான வீரர்கள் ஏலம் நேற்று முன்தினம் ஜெய்ப்பூரில் ஆரம்பமானது.

இந்த ஏலத்தில் 346 வீரர்கள் பங்கேற்றிருக் கின்றனர். இந்திய வீரர் கள் 50 பேர், வெளிநாட்டு வீரர்கள் 20 பேர் என 70 வீரர்கள் ஏலத்தில் எடுக்கப் படவுள்ளனர். இதற்கான வீரர்கள் ஏலம் விறுவிறுப் பாக நடைபெற்றது.

கடந்த இரு சீசன்களி லும் பெரிதும் ஜொலிக்காத யுவராஜ் சிங்கை கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி விடுவித்தது.

அவரைச் சென்னை அணிக்கு ஏலத்தில் எடுக்க வேண்டும்எனவும், டோனி, ரெய்னா மற்றும் யுவராஜ் சிங் கூட்டணி ஆட்டத் தைக் கண்டுகளித்திட வேண்டும்எனவும்சென்னை ரசிகர்கள் காலை முதலே இணையதளங்களில் கோரிக்கை விடுத்து வந்த னர்.

அடிப்படை விலை ரூ. 1 கோடி என அறிவிக்கப் பட்ட யுவராஜ் சிங்கை முதல் சுற்றின்போது எந்த அணியினரும் எடுக்க முன்வரவில்லை. இதனால் ரசிகர்கள் அனைவருமே



அதிர்ச்சிக்குள்ளாகினர்.

அதன்பின்னர் இரண்டா வது சுற்றில் மும்பை இந்தி யன்ஸ் அணி அடிப்படை விலைக்கே ஏலம் எடுத்தது. இது சென்னை ரசிகர்க ளுக்கு ஏமாற்றத்தை அளித் தாலும், கிரிக்கெட் ரசிகர் களுக்கு சிறிது மகிழ்ச்சியை அளித்துள்ளது.

# பாகிஸ்தான் கிரிக்கெட்டுக்கு அபாராதம் விதித்தது ஐ.சி.சி!




பாகிஸ்தான் கிரிக்கெட் சபை, இந்தியக் கிரிக்கெட் சபை மீது, தொடர்ந்திருந்த வழக்கிற்கான செலவில் 60 சதவீதத்தை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை, இந் தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபைக்கு வழங்க வேண்டு மென சர்வதேச கிரிக்கெட் சபை உத்தரவிட்டுள்ளது.

இந்தியக் கிரிக்கெட் சபை, 70 மில்லியன் அமெ ரிக்க டொலர்கள் இழப்பீடு வழங்க வேண்டுமென கோரி, சர்வதேச கிரிக்கெட் சபையின் பிரச்சினைகளுக்கு தீர்வு தரும் தீர்ப்பாயத்திடம் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை வழக்கு தாக்கல் செய்திருந்தது.

இதனை, மைக்கல் பெலாப், ஜேன் போல்சன், அன்னபெல் பென்னட் ஆகியோர் தலைமையிலான விசாரணைக்குழு, விசாரணை நடத்தி வந்தது.

இந்நிலையில் இந்த வழக்கினை கடந்த மாதம், ஒத்தி வைப்பதாக சர்வதேச கிரிக்கெட் சபையின் பிரச்சினைகளுக்குத் தீர்வு தரும் தீர்ப்பாயம் அறி வித்தது.

ஐ.சி.சி. தகராறு தீர்ப்பாணையத்தின் இந்தத் தீர்ப்பு பிணைப்புடையது மற்றும் மேல்முறையீடு செய்ய முடியாதது என தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில் இந்த வழக்குக்கான செலவை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை, வழங்க வேண்டும் என்று இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை முறையிட்டது. இதையடுத்து இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை கோரிய தொகையில் 60 சதவீதத்தை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை வழங்க வேண்டும் என்று ஐ.சி.சி. தீர்ப்பளித்துள்ளது.

இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய கிரிக்கெட் சபைகளுக்கு இடையில், கடந்த 2014ஆம் ஆண்டு கையெழுத்தான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் படி, கடந்த 2015 முதல் 2023ஆம் ஆண்டு வரை இந் தியா – பாகிஸ்தான் கிரிக்கெட் அணிகளுக்கு இடையே 6 தொடர்கள் நடத்தப்படவேண்டும். இவற்றில் 4 தொடர்கள் பாகிஸ்தானில் நடத்தப்படவேண்டும் என முடிவு செய்யப்பட்டது.

இதில் 14 டெஸ்ட் போட்டிகள், 30 ஒருநாள் போட்டிகள், 12 ரி–20 போட்டிகள் என மொத்தமாக 56 போட்டிகள் நடத்த திட்டமிடப்பட்டது.

ஆனால், மும்பையில் நடந்த தீவிரவாதத் தாக்குதல், பாகிஸ்தான் இராணுவம் இந்திய எல்லையில் அத்து மீறித் தொடர்ந்து தாக்குதல் நடத்துதல், பாகிஸ்தானில் தீவிரவாத அச்சுறுத்தல் எனப் பல காரணங்களை முன்னிறுத்தி பாகிஸ்தானுடன் விளையாட இந்தியா தொடர்ந்து மறுத்து வருகின்றது.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் அப்போதைய இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை செயலாளர் சஞ்சய் பட்டேல் கையெழுத்திட்டார். ஆனால் இந்திய அரசு அனுமதி அளிக்காததால் பாகிஸ்தானிலோ, பொதுவான இடத்திலோ விளையாட முடியாத நிலை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு ஏற்பட்டது.

இதனால், தங்களுக்கு கோடிக்கணக்கில் வரு மான இழப்பு ஏற்பட்டதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கூறியது.

அத்தோடு தங்களது நட்டத்தை ஈடுகட்டும் வகையில், இந்தியா, 70 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இழப்பீடு வழங்க வேண்டுமெனவும் சர்வதேச கிரிக்கெட் சபையிடம் பாகிஸ்தான் புகார் அளித்தது. இதன் அடிப் படையிலேயே தற்போது விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சட்டம், ஒழுங்கு அமைச்சை ஜனாதிபதி தம்வசப்படுத்தியுள்ளார்.

ஏனைய புதிய அமைச்சர்களின் விவரம் வருமாறு:-

1. ரணில் விக்கிரமசிங்க – தேசிய கொள்கைகள், பொருளாதார அபிவிருத்தி, மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, வடக்கு மாகாண அபிவிருத்தி, தொழிற்பயிற்சி திறன் மற்றும் இளைஞர் விவகாரம்
2. ஜோன் அமரதுங்க – சுற்றுலாத்துறை, வன ஜீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ விவகாரம்
3. காமினி ஜயவிக்கிரம பெரேரா – புத்த சாசனம் மற்றும் வடமேல் மாகாண அபிவிருத்தி
4. மங்கள சமரவீர – நிதி மற்றும் ஊடகம்
5. லக்ஷ்மன் கிரியெல்ல – அரச தொழில் முயற்சியான்மை, மத்திய மலைநாட்டு மரபு மற்றும் கண்டி அபிவிருத்தி
6. ரவூப் ஹக்கீம் – உயர் கல்வி, நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல்
7. திலக் மாரப்பன – வெளிநாட்டலுவல்கள்
8. ராஜித சேனாரத்ன – சுகாதாரம், போக்கு மற்றும் சுதேச வைத்தியம்
9. ரவி கருணாநாயக்க – மின்சக்தி, சக்தி வலு மற்றும் வர்த்தக அபிவிருத்தி
10. வஜிர அபேவர்தன – உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள்
11. ரிஷாத் பதியுதீன் – கைத்தொழில், வர்த்தக அலுவல்கள், நீண்ட காலம் இடம்பெயர்ந்துள்ளோரின் மீள்குடியேற்றம் மற்றும் கூட்டுறவு
12. பாட்டலி சம்பிக்க ரணவக்க – பெருநகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி
13. நவீன் திஸாநாயக்க – பெருந்தோட்ட தொழிற்துறை
14. பி.ஹரிசன் – விவசாயம், கிராமிய பொருளாதார அலுவல்கள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரியல் வள அபிவிருத்தி
15. கபீர் ஹாசிம் – பெருந்தெருக்கள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வள அபிவிருத்தி
16. ரஞ்சித் மத்தும பண்டார – பொது நிர்வாகம், இடர் முகாமைத்துவம்
17. கயந்த கருணாதிலக – காணி மற்றும் நாடாளுமன்ற மறுசீரமைப்பு
18. சஜித் பிரேமதாஸ – வீடமைப்பு, நிர்மாணம் மற்றும் கலாசார அலுவல்கள்
19. அர்ஜுன ரணதுங்க – போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள்
20. பழனி திகாம்பரம் – மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி
21. சந்திராணி பண்டார – மகளிர், சிறுவர் விவகாரம் மற்றும் உளர் வலய அபிவிருத்தி
22. தலதா அத்துகோரல – நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு
23. அகிலவிராஜ் காரியவசம் – கல்வி
24. அப்துல் ஹலீம் முஹமட் ஹசீம் – தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய விவகாரம்
25. சாகல ரத்நாயக்க – துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் தெற்கு அபிவிருத்தி
26. ஹரீன் பெர்னாண்டோ – தொலைத் தொடர்பு, டிஜிட்டல் உட்கட்டமைப்பு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை
27. மனோ கணேசன் – தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய அலுவல்கள்
28. தயா கமகே – தொழில், தொழிற்சங்க உறவுகள் மற்றும் சமூக வலுவூட்டல்
29. மலிக் சமரவிக்கிரம – அபிவிருத்தி மூலோபாயங்கள், சர்வதேச வர்த்தகம் மற்றும் விஞ்ஞான தொழில்நுட்ப ஆராய்ச்சி. (ஐ)

## டிசெம்பர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்திய ஊடகமான இந்துஸ்தான் ரைம்ஸ் இணையத்துக்கு வழங்கியுள்ள விசேட செவ்வியுலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அதில் மேலும் அவர் கூறுகையில் –

விடுதலைப் புலிகளுடனான போரின்போது இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்ட 90 சதவீதத்துக்கும் அதிகமான காணிகள் அதன் உரிமையாளர்களிடம் மீண்டும் கொடுக்கப்பட்டுள்ளன. அத்தோடு எஞ்சி இருக்கும் 2,500 ஏக்கர் நிலம் இந்த மாத இறுதிக்குள் விடுவிக்கப்படும்.

நல்லிணக்கத்தைப் பலப்படுத்த நாங்கள் எப்போதும் வேலை செய்தோம். அந்தவகையில் வடக்கிலும் கிழக்கிலும் வாழும் மக்களின் மனக்குறைகளையும், கஷ்டங்களையும் அகற்றுவதற்கு எனது அரசு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

அதன்பிரகாரம் உட்கட்டமைப்பு வசதிகள், வீதிகள், பாடசாலைகள், மருத்துவமனைகள் உட்பட பல்வேறு விடயங்களை மேம்படுத்துவதற்கான திட்டங்களை நாங்கள் நடைமுறைப்படுத்தியுள்ளோம்.

நாட்டில் எந்தப் பகுதியையும் புறக்கணிக்காமல் அபிவிருத்தி செய்யவேண்டும் என்பதே எமது நோக்கம். அந்தவகையில் வடக்கிலும் கிழக்கிலும் எமது அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள முழுமையான ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல் கட்சிகளையும் நாம் வலியுறுத்துகிறோம் – என்றார்.

இராணுவத்தால் கைப்பற்றப்பட்ட பொது மக்களின் காணிகளை இந்த வருட இறுதிக்குள் விடுவிப்பேன் எனக் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் ஜனாதிபதி மைத்திரிபால தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## 6 பேரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நேற்றுக் காலை 8.30 மணிக்கு இடம்பெற்ற புதிய அமைச்சர்கள் சத்தியப்பிரமாண நிகழ்வில் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் 29 பேர் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து அரசுடன் இணைந்து கொண்டவர்கள் எவருக்கும் அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவில்லை.

சுதந்திரக் கட்சியிலிருந்து அரசுக்கு ஆதரவு வழங்கிய 4 பேரின் பெயர்கள் அமைச்சரவைப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டுள்ளன. லக்ஷ்மன் செனவிரத்ன, விஜித் விஜேமுனி சொய்ஷா, பியசேன கமகே மற்றும் ஏ.எச்.எம். பௌசி ஆகியோரின் பெயர்களே இவ்வாறு நீக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், ஐக்கிய தேசியக் கட்சி சார்பாகப் பெயர் குறிப்பிடப்பட்டவர்களில் 2 பேரின் பெயர்களை நீக்கப்பட்டுள்ளன. சரத் பொன்சேகா, பாலித ரங்கே பண்டார ஆகியோரின் பெயர்களே இவ்வாறு பட்டியலிலிருந்து ஜனாதிபதியால் நீக்கப்பட்டுள்ளன எனக் கூறப்படுகின்றது. (ஐ)

## 10 வருட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தெரிவித்துள்ளார்.

நேற்றுத் தனது அமைச்சின் கடமைகளைப் பொறுப்பேற்ற பின்னர் ஊடகங்களுக்கு அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

எதிர்காலங்களில் வீடமைப்பு மற்றும் கட்டுமானத்துறையைப் போல கலாசார விடயங்களிலும் அபிவிருத்தியை முன்னெடுப்பதே தனது நோக்கம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

## மீள்குடியேற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ரிஷாத் பதியுதீன், நீண்டகாலமாக இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றல் அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதனடிப்படையில் வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்றம் சார்ந்த பணி மட்டும் அவரிடம் வழங்கப்பட்டுள்ளது.

எனினும் அமைச்சர்களுக்கு ஒதுக்கப்பட்ட திணைக்களங்கள் தொடர்பான வர்த்தமானி அறிவிப்பை ஜனாதிபதி வெளியிட்டால்தான் மீள்குடியேற்ற அமைச்சின் குழப்ப நிலைக்கு விளக்கம் கிடைக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## 20 நிமிடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கூட்டம், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

புதிய அமைச்சரவை நியமிக்கப்பட்ட பின்னர் – இடம்பெற்ற முதலாவது அமைச்சரவைக் கூட்டம் சுமார் 20 நிமிடங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்ததாகத் தெரியவருகின்றது.

புதிய அமைச்சரவை நியமிக்கப்பட்ட பின்னர், ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் தலைமையில் அமைச்சர்கள் குழுவாக படமெடுத்துக்கொள்வது வழமை. ஆனால், இம்முறை அவ்வாறு நடைபெறவில்லை என அறிய முடிகின்றது.

அமைச்சுப்பதவிகள் வழங்கப்படும்போது மட்டுமே புகைப்படம் எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

## எரிபொருள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பின்னர், ஜனாதிபதி செயலகத்தில் வைத்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

4 மாதங்களுக்கான இடைக்கால கணக்கறிக்கைக்கு அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளது. இடைக்காலக் கணக்கறிக்கை இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

அதேவேளை, அமைச்சராக நியமிக்கப்பட்டதையோடு, அமைச்சுப்பதவிகளையும் அவர் பொறுப்பேற்றார். (ஐ)

## மஹிந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நபர் ஒருவரைத் தாக்கியமை தொடர்பில் கொடக்கவெல பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற முறைபாட்டுக்கு அமைய ரஞ்சித் சொய்சா உள்ளிட்ட நால்வர் பொலிஸ் நிலையத்தில் முன்னிலையானபோது, கைதுசெய்யபட்டு பெல்மடுல்ல நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களை அடுத்தவருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ஐ)

# மஹிந்த தரப்பினருக்கு கெட்டகாலம் ஆரம்பம்

## கூறுகிறார் முஜிபுர் ரஹ்மான்

கொழும்பு, டிசெ. 21

மஹிந்த ராஜபக்ஷ தரப்புக்குக் கெட்டகாலம் ஆரம்பமாகிவிட்டது என ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

எனவே மஹிந்த தரப்பினர், தங்களது ஜாதகத்தைப் பார்த்தால் நன்றாக இருக்கும் என அவர் குறிப்பிட்டார்.

அலரி மாளிகையில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

மஹிந்த ராஜபக்ஷவுக்குக் கடந்த காலங்களில் ஒரு சிறப்பான மரியாதை மக்களிடத்தில் காணப்பட்டது. முன்னுதாரணமான ஓர் அரசியல் தலைவராகவே அவர் இருந்து வந்தார்.

ஆனால், அவரை சுற்றியுள்ள சிலரின் ஆலோசனைகளைப் பெற்று அவரும் இன்று தன்னிலையிலிருந்து கீழிறங்கியுள்ளார்.

அவரது அனைத்து முயற்சிகளும் தோல்வியடைந்துள்ளன. பிரதமராக பதவியேற்றபோது இரண்டு பிரதமர் பிரச்சினைக்கு அவர் முகம் கொடுத்தார். தற்போது எதிர்க்கட்சித் தலைவராக பதவியேற்று, இரண்டு எதிர்க்கட்சித் தலைவர்கள் எனும் நிலையையும் நாட்டில் ஏற்படுத்தியுள்ளார்.

மேலும், அவர் உள்ளிட்ட தரப்பினர் பொதுஜன பெரமுன கட்சியின் உறுப்புரிமையைப் பெற்றுக்கொண்டமை எம்மனைவருக்கும் நன்றாகத் தெரியும். அது தொடர்பிலான புகைப்படங்கள், காணொலிகளும் உள்ளன.

எனினும், தற்போது மொட்டுக்கட்சி உறுப்புரிமையைப் பெற்றுக்கொள்ளவில்லை என அவர்கள் கூறுகிறார்கள்.

உள்ளூராட்சி மன்றத்தேர்தலின் போதும் மொட்டுக் கட்சிக்காக செயற்பட்டுவிட்டு, இன்று பிரச்சினை வந்த பின்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் என்று கூறுகிறார்கள்.

திருட்டு வேலை செய்தால் கூட, அதனை அவர்களால் வெற்றிகரமாகச் செய்துகொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. அவர்களுக்கு உண்மையை ஒப்புக்கொள்ள இன்று அச்சம் ஏற்பட்டுள்ளது.

என்னைப் பொறுத்தவரை அவர்களுக்குக் கெட்டகாலம் ஆரம்பமாகிவிட்டது என்றே தெரிகிறது. எதற்கும் அந்த தரப்பினர், தங்களது ஜாதகத்தைப் பார்த்தால் நன்றாக இருக்கும்.

எவ்வாறாயினும், நாட்டு மக்களுக்கு இவர்களது செயற்பாடுகள் தொடர்பில் நன்றாகத் தெரியும். அவர்கள் ஒன்றும் முட்டாள்கள் அல்லர் – என்றார். (ஐ)

# மழையுடனான காலநிலை தொடரும்

கொழும்பு, டிசெ. 21

நேற்று முதல் 22ஆம் திகதி வரை மழையுடனான காலநிலை தொடருமென எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு எதிர்வு கூறியுள்ளது.

இதன்படி வடக்கு, வடமத்திய மற்றும் கிழக்கு ஆகிய மாகாணங்களில் அதிக மழை பெய்யக் கூடுமென்றும், அத்தோடு மத்திய, சப்ரகமுவ ஆகிய மாகாணங்களிலும் மற்றும் காலி, மாத்தறை ஆகிய மாவட்டங்களிலும் இடியுடன் கூடிய பலத்த



மழை பெய்யுமெனவும் வளிமண்டலவியல் திணைக்களம் கூறியுள்ளது. (ஐ)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பொறுப்புகள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்குப் வழங்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி மைத்திரிபால தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவைப் பதவியேற்பு நிகழ்வில் மேற்படிப் பொறுப்புக்களை பிரதமர் ரணில் ஏற்றுப் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார். (ஐ)

## இடைக்காலக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பால சிறிசேன தலைமையில் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போது, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் முன்வைக்கப்பட்ட இடைக்காலக் கணக்கறிக்கைக்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது.

இதற்கமைய நிதியமைச்சர் மங்கள சமரவீரவால் இன்று இடைக்கால கணக்கறிக்கை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. (ஐ)

## புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தாகவும் அவர் கூறினார்.

அமைச்சுப் பொறுப்பை ஏற்றுக்கொண்டபின்னர் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் குறிப்பிட்டார். (ஐ)

## ஜனாதிபதிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தயாராகி வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதற்கமைய ஜனாதிபதியால் நிராகரிக்கப்பட்டவர்களுக்கு எப்படியாவது அமைச்சுப் பதவியை வழங்கவேண்டும் என்ற நோக்கில் பிரதமர் ரணில் துஷ்வியூகம் அமைத்துள்ளமையுடன், அவர்களுக்கு அமைச்சுப் பதவியை வழங்குவதற்கான பிரேரணையை நாடாளுமன்றில் சமர்ப்பிக்க உத்தேசித்துள்ளார் எனவும் தெரியவருகிறது.

எவ்வாறாயினும் இந்தப் பிரேரணை நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டு அதனை ஜனாதிபதி நிராகரித்தாலும், அதற்கு எதிராக நீதிமன்றத்தை நாடத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. (ஐ)

# 1990 இற்கு முன் இருந்த நிலைக்கு மயிலிட்டி மக்களை உயர்த்துவோம்

## யாழ். அரச அதிபர் வேதநாயகன் உறுதி






யாழ்ப்பாணம், டிசெ. 21

1990 ஆம் ஆண்டு இடம்பெயர்வுக்கு முன்னர் இந்த மண்ணில் எவ்வாறு இருந்தீர்களோ அந்நிலையை ஏற்படுத்தித் தருவோம் என மயிலிட்டி மக்களிடம் யாழ். மாவட்ட அரச அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் உறுதிபடத் தெரிவித்தார்.

வலி வடக்குப் பிரதேசத்தின் மயிலிட்டி வடக்கு பலநோக்கு மண்டபமாக அமைக்கப்பட்டிருக்கும் கிராமியச் செயலகத் திறப்பு விழாவில் நேற்றுப் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வீடுகள் இருந்த அடையாளமே தெரியாதவாறு முற்றிலும் அழிவடைந்த நிலையிலேயே மயிலிட்டி பகுதி விடுவிக்கப்பட்டுள்ளது. ஆகவே இந்தக் கிராமத்தை புதிதாகவே உருவாக்க வேண்டிய தேவையுள்ளது. இடம்பெயர்வுக்கு முன்னதாக நீங்கள் எவ்வாறு இருந்தீர்களோ அந்நிலைக்கு உங்களை கொண்டுவருவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வோம் – என்றார்.

நோர்வே அரசின் அனுசரணையுடன் யு.என்.டி.பி. நிறுவனத்தின் நிதி பங்களிப்புடன்கட்டியெழுப்பப்பட்டிருக்கும்பலநோக்கு மண்டபத் திறப்பு விழாவும் மண்டப கையளிப்பு நிகழ்வும் நேற்று வியாழன் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்றது.

யாழ். அரச அதிபர் பிரதம விருந்தினராக பங்கேற்று மண்டபத்துக்கான பெயர்ப் பலகையைத் திரை நீக்கம் செய்து வைத்ததுடன் மயிலிட்டி வடக்கு ஜே/251 கிராமிய அபிவிருத்தி அமைப்பிடம் உத்தியோகபூர்வமாகக் கையளித்திருந்தார்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினர்களாக தெல்லிப்பளை பிரதேச செயலாளர் ச.சிவசிறி, வலிகாமம் வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன் மற்றும் ஊறணிப் பங்குத்தந்தை அருட்திரு தேவராஜன் , கௌரவ விருந்தினர்களாக யு.என்.டி.பி. நிறுவனத்தின் பிராந்திய திட்ட இணைப்பாளர் த.தனக்குமார், யு.என்.டி.பி. நிறுவனத்தின் வெளிக்கள திட்ட நிபுணர் இ.சர்வானந்தா மற்றும் கடற்றொழில் பரிசோதகர் ஜெயசீலன் ஆகியோருடன் மயிலிட்டி வடக்கு கிராம சேவையாளர் க.துவாரகன், அபிவிருத்தி உத்தியோகத்தர் க.வீரசிவகரன் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

(ஐ)

## மைத்திரி மீது குற்றப் பிரேரணை; ஐ.தே.மு. இன்னும் தீர்மானமில்லை

### கூறுகின்றார் சம்பிக்க ரணவக்க

ஜனாதிபதிக்கு எதிராகக் குற்றப் பிரேரணை கொண்டு வருவது தொடர்பாக ஐக்கிய தேசிய முன்னணி எந்தத் தீர்மானங்களையும் எடுக்கவில்லை என பெரு நகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஆணைக்குழுஒன்றை நியமித்து நல்லாட்சி அரசின் ஊழல் மோசடிகளை விசாரிக்க ஜனாதிபதி எடுக்கும் நடவடிக்கை தவறானது அல்ல. ஆயினும் தனிநபர்களை அரசியல் ரீதியாக இலக்கு வைத்தோ அவர் களை அழிக்கும் நோக்கிலோ விசாரணை மேற்கொள்ளப்பட்டால், அதில் எந்தப் பயனும் இல்லை.

ஊழல், மோசடிகளை கண்டறி யும் உண்மையானநேர்மையானதேவை ஜனாதிபதிக்கு இருக்குமாயின், முதலில், மிக்விமான ஊழல், அவன்கார்ட் கொடுக்கல் வாங்கல், இராணுவத்தின் சொத்துக்கள் விற்பனை செய்யப்பட்டமை உட்பட 2004 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை நடந்த ஊழல் மோசடிகளை விசாரிக்கவேண்டும்.

மிக் விமான கொள்வனவு தொடர்பான ஊழலில் நாட்டுக்கு ஏற்பட்ட நட்டமானது பிணை முறி கொடுக்கல் வாங்கலில் ஏற்பட்ட நட்டத்தை விட 20 மடங்கு பெரிய நட்டம்.

நல்லாட்சிஅரசின் ஆட்சிக்காலத்தில் தாஜுதீன், லசந்த விக்ரமதுங்க, எக்னெலிகொட ஆகியோர் தொடர்பிலானவிசாரணைகளில் இந்தக் கொலைகளுக்குக் கட்டளையிட்டவர்களுக்குஎதிராகநடவடிக்கை எடுக்க முடியவில்லை. அரசியல் அழுத் தங்கள் காரணமாக மேலும் பல விசா ரணைகள் கிடப்பில் போடப்பட்டன – என்றார்.




## உடனடியாகவே கடமைகளை பொறுபேற்ற அமைச்சர் சஜித்



கொழும்பு, டிசெ. 21

வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அமைச்சராக நேற்று சத்தியப் பிரமாணம் செய்து கொண்ட சஜித் பிரேமதாஸ உடனடியாக அமைச்சுக்குச் சென்று தனது கட மைகளைப் பொறுப்பேற்றார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அமைச்சரவை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் நேற்று சத்தியப் பிரமாணம் செய்து கொண்டது.

நல்லாட்சி அரசில் வீடமைப்பு, நிர்மாணத்துறை அமைச்சராகப் பதவி வகித்த சஜித் பிரேமதாஸ, கிராம உதயம் திட்டத்தின் கீழ் வீடுகள் இல்லாத மக்களுக்கு வீடுகளை நிர்மாணிக்கும் பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

## ஊடகங்களுக்கு அனுமதி மறுப்பு

புதிய அரசின் அமைச்சரவை பதவியேற்பு நிகழ்வு மூடப்பட்ட அறைக்குள் இடம்பெற்றது.

நேற்றுக் காலை 8.30 மணிக்கு பதவியேற்பு ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. உரிய நேரத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி செயலகத்துக்கு வந்து காத்திருந்தனர்.

எனினும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, சுமார் 8.45 மணியளவிலேயே செயலகத்துக்கு வந்து சேர்ந்தார்.

அதன் பின்னர், அமைச்சரவை பதவியேற்பு நிகழ்வு ஆரம்பமாகி இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் செய்தி சேகரிக்க ஊடகங்களுக்கு அனுமதி அளிக்கப்படவில்லை. படங்களை ஜனாதிபதி ஊடகப்பிரிவே வெளியிடும் என்று அறிவிக்கப்பட்டது.

அமைச்சர்களாகப் பதவியேற்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் குடும்பத்தினர் மற்றும் அரசியல்வாதிகளும் கூட இந்த நிகழ்வுக்கு அனுமதிக்கப்படவில்லை.

(ஐ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.12.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.